Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 291 | புதன்கிழமை | ஆவணி 30 ஆம் நாள் 15 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கொரோனா பலி 136

கொழும்பு, செப். 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 136 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின்

15 ➤

# வெளிநாட்டுத் தலையீட்டை அரசு அனுமதிக்கமாட்டாது!

### ஆணையாளரின் அறிக்கைக்கு பீரிஸ் பதில்



கொழும்பு, செப். 15

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானத்தின் ஊடாக நிறுவப்படக்கூடிய எந்தவொரு வெளியகப் பொறிமுறை தொடர்பான முன் மொழிவுகளையும் வெளிநாட்டுத் தலையீட்டையும் இலங்கை அரசு முழுமையாக நிராகரிக்கின்றது. அவற்றுக்குப் பதிலாக உள்ளகப் பொறிமுறையின் ஊடாக அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் நேற்று உரையாற்றும் போது அறிவித்தார்.

15 ➤

## கொரோனா 2,473

கொழும்பு, செப். 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 473 பேர் நேற்று அடையாளம் காணப்

15 ➤

## பருப்பு விலை அதிகரிக்கலாம்

கொழும்பு, செப். 15

பருப்பின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச்

15 ➤

துப்பாக்கி முனையில்

## தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட வைத்த ரத்வத்த

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 15

அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் முழந்தாளிட வைத்து அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

12 ➤

## ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சை பெறுபேறு விரைவில்

கொழும்பு, செப். 15

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை விரைவாக வெளியிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்

15 ➤

## 21ஆம் திகதிக்குப் பின்னர் ஊரடங்கு நீக்கப்பட வாய்ப்பு

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு



கொழும்பு, செப். 15

'இலங்கையில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையிலும், மரணங்களின் எண்ணிக்கையிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்

15 ➤

## வவுனியாவில் 8 பேர் கொரோனாவுக்கு பலி

வவுனியா, செப். 15

வவுனியாவில் 8 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்தனர்.

குறித்த நபர்களில் ஐவர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு முன்னெடுக்

15 ➤

## 'மாஸ்க்' அணியாதமைக்காக 7,500 ரூபா தண்டம் விதிப்பு

### பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், செப். 15

மாஸ்க் அணியாதமைக்காக 12 பேருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்த பருத்தித்துறை நீதிமன்றம்.

15 ➤

## 1970 யுகத்துக்கு திரும்புகிறோம்

### ஆளுங்கட்சி எம்.பி. கருத்து

கொழும்பு, செப். 15

'இலங்கை மீண்டும் 1970, 1977 யுகத்துக்குத் திரும்பி வருகின்றது இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின்

15 ➤

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு ஒக்ரோபரில்

### கொரோனாக் கட்டுப்பாடுகள் நீடித்தால் நிகழ்நிலையில் நடத்தவும் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர்

14 ➤

## வாழமுடியாத நாடாக மாறுகிறது இலங்கை!

### மைத்திரி அணி கடும் சீற்றம்

கொழும்பு, செப். 15

'இலங்கை இன்று மக்கள் வாழமுடியாத நாடாக மாற்றம் பெற்று வருகின்றது இவ் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்

14 ➤

## ஈழத் தமிழ்ப் பெண் நோர்வேயில் எம்.பியானார்



ஒஸ்லோ, செப். 15

ஈழத் தமிழ்ப் பெண்ணான ஹம்சி, நோர்வேயில் தொழிற்கட்சி சார்பாகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத்

14 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிள்ளையார் கோயில் குளத்துக்கு பௌத்த கொடியின் வர்ணங்கள்!

## மக்கள் கடும் அதிருப்தி தடுத்து நிறுத்தினார் மேயர்

யாழ்ப்பாணம், செப்.15

**யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலைக்கு அருகே உள்ள யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான பிள்ளையார் கோயில் குளத்தின் தடுப்புக் கம்பிகளில் பூசப்பட்ட வர்ணத்தால் சர்ச்சை எழுந்துள்ளது. கடந்த வாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ச, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் அந்தப் பகுதிக்குச் சென்ற நிலையில், பௌத்த கொடியின் வர்ணத்தை ஒத்த நிறங்கள் பூசப்பட்டுள்ளன என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இந்தக் குளம் உலக வங்கியின் அனுசரணையுடன் சீரமைக்கப் பட்டு வருகின்றது. 1996 ஆம் ஆண்டு 1.51(0.6063) ஏக்கராக இருந்த குளத்தின் பரப்பளவு 2013 ஆண்டு மீள அளக்கப்பட்ட நிலையில்1.26(0.5078) ஏக்க ராக குறைந்திருந்தது. தற்போது புனரமைக்கும் போது குளத்திலி ருந்து தூர்வாரப்பட் மண் மீண்டும் குளத்தின் சுற்றுப்புறங்களில் கொட்டப்பட்டது என்ற குற்றச்சாட்டு களும் எழுந்திருந்தது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம் பெறும் அபிவிருத்திகள் தொடர் பில் கள ஆய்வுகளை மேற்கொள் வதற்காக கடந்தவாரம் அமைச்சர் நாமல் ராஜபக்ச, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட குழுவி னர் அந்த பகுதிக்குச் சென்றிருந் தனர்.


அவர்கள் பார்வையிட்டுச் சென்ற பின்னர் பௌத்த கொடியின் வர் ணத்தை ஒத்த வர்ணம் குளத்தின் தடுப்புக்கம்பிக்கு பூசப்பட்டுள் ளது.

அந்த வர்ணங்கள் தொடர்பாக பிரதேச மக்களால் யாழ் மாநகர சபை முதல்வருக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து, நேற்று நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகா ரிகளைத் தொடர்பு கொண்டு யாழ். மாநகரசபை முதல்வர் பேசி யிருந்தார்.

குள சீரமைப்புக்காக அந்தப் பகுதி மக்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது என்றும், அந்தக் குழுவின் சம்மதம் பெற்றே வர் ணங்களே தீட்டப்பட்டன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதையடுத்து வர்ணம் தீட்டும் பணியை இடைநிறுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் கேட்டுக்கொண்டார். தற்போது வர்ணம் தீட்டும் பணி கள் நிறுத்தப்பட்டு, புதிதாக வர் ணம் தீட்டப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-20)





# கொரோனா நீங்க வேண்டி பொன்னாலையில் வழிபாடு

## ஞானசார தேரரும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், செப்.15

நாட்டில் உள்ள கொரோனா அபாய நிலைமை நீங்க வேண்டி யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் உள்ள நான்கு கிருஷ்ணர் ஆலயங்களில் நேற்று இந்த விசேட பூசைகள் நடைபெற்றன.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் சோமஸ்கந்த சர்மா, நயினை நாக தீபம் விகாராதிபதி மீககா வதுலே சிறீ விமல ஆகி யோர் ஏற்பாட்டால் வழிபாடுகள் நடைபெற்றன. இந்த வழிபாட்டில் கலகொட அத்தே ஞானசார தேரரும் கலந்துகொண்டார். பூசை வழிபாடுக ளின் பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது.

இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் கொரோனா தொற்றில் இருந்து விடுபட வேண்டியே யாழ்ப்பா ணத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப் பட்டன. இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவ தும் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தின் காரண மாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் . அது சிங்களவராக இருக்கட்டும் தமிழராக இருக்கட்டும். சிலர் ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாமல் உள்ளார்கள்.

அதேபோல் சிலருக்கு வேலை இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது. இந்த நோய்த் தொற்றுக்கு உள் ளானோர் சிகிச்சை பெறுவதற்கு அவதிப்படுகிறார் கள். அனைத்து இன மக்களும் மிகவும் கஷ்டப்படு கிறார்கள்.

கடவுள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக பௌத்த மதத்தில் நாம் பின்பற்றும் ஒரு விதிமுறை யைப் போல இந்து மதத்தில் உள்ள ஆகம விதி முறையை இணைத்து இந்தத் தொற்றில் இருந்து நாடு விடுபட கடவுளிடம் வேண்டி ஒரு விசேட பிரார்த் தனையை மேற்கொண்டுள்ளோம்.

இந்தத் தொற்றிலிருந்து விடுபடுவதற்கான ஒரு முயற்சியாகவே அதாவது உலக மக்கள் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டியே இந்த விசேட பூசை வழிபாட்டினை ஏற்பாடு செய்துள்ளோம். இந்த வழி பாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என நம்புகின்றேன் - என்றார். (எ-26,20,125)

# ஐ.நா. கண்காணிப்பை நிராகரிக்கமாட்டோம்

## அரசு தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

நாட்டில் அவசரகால சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில், சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தேவையற்ற விதத்தில் தலையீடு களை மேற்கொள்ளவில்லை. இதுதான் உண்மை நிலைமை. இலங்கையானது ஐ.நா.வின் அங்கத்துவ நாடாகும். அந்தவகை யில் அவ்வமைப்பின் கண்காணிப்புகளை நாம் நிராகரிக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது அவசரகாலச் சட்டம் மற்றும் சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தின் வகிபாகம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட கருத்து தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் டலஸ் மேலும் கூறியவை வருமாறு.

'நாட்டில் கடந்த ஒரு வருடகாலப்பகுதிக்குள் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், இவற்றில் பொலிஸ் மற்றும் இராணுவம் தலையிடவில்லை. குறைந்தபட்சம் தண்ணீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொண்டாவது, போராட்டக்காரர்களை கலைப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற ஆசிரியர்களின் போராட்டமொன்றின் போது பொலிஸாரால் சிலர் கைது செய்யப்பட்டனர். இது தொடர் பில் அரசு ஏற்கனவே கவலை வெளியிட்டுள்ளது. இந்த ஒரு சம்பவத்தைத் தவிர ஏனைய சம்பவங்கள் எதுவுமே இடம்பெற வில்லை. போராட்டக்காரர்கள் தாக்கப்படவும் இல்லை. கலைக்கப் படவும் இல்லை. அவசரகால சட்டத்தில் இரு சரத்துகள் திருத்தப் பட்டு, உணவுகளை பகிர்ந்தளிப்பதில் இராணுவம் இணைக்கப்பட் டுள்ளது. தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையின்போது இராணுவத்தின் தலையீடு சாதகமா, பாதகமா? அவர்களின் சேவையை தவிர்க்க முடியுமா? அதேபோல்தான் உணவுப் பங்கீட்டு விடயத்திலும்.

அதேவேளை, இலங்கை ஐ.நா.வின் அங்கத்துவ நாடாகும். அவ் வமைப்பில் அங்கம் வகிப்பதை கௌரவமாக கருதும் நாடாகும். ஐ.நா.வின் கண்காணிப்புகளை நாம் ஏற்போம். நிராகரிக்க மாட் டோம். அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

எனினும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிடுவது போல் தற்போது நாட்டில் எதுவும் நடக்கவில்லை. தேவையற்ற விதத்தில் இராணுவத் தலையீடுகள் இடம்பெறவில்லை. இதற்கு நாமே சாட்சியாளர்கள், என்றார். (ஒ-44)

# சிறுபான்மையினர் பாதுகாப்பை உறுதிப்படுத்த தொடர் அழுத்தம்

## பிரிட்டன் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.15

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையின சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசியமான அழுத்தங்களை தொடர்ச்சியாக வழங்குவதற்குத் தயாராக உள்ளோம் என்று இலங்கைக்கான பிரித்தா னியத் தூதுவர் சாரா ஹல்டன் தெரிவித்தார். தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை யின் 48ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கரிசனைகளை ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் விமர்சகர்கள் உள்ளடங்கலாக இலங்கை தொடர்பான பல் வேறு விடயங்கள் தொடர்பான ஆணையா ளரின் அதிருப்தியை ஏற்றுக் கொள்கின் றேன். இவ்வாறான சூழ்நிலையில் சிறிலங் காவில் மனித உரிமைகள் மற்றும் சிறுபான் மையின சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்துவதற்கு அவசியமான அழுத்தங்களை பிரித்தானியா தொடர்ச்சியாக வழங்கும். என் றார். (எ-இ)

# வெள்ளியன்று எம்.பியாகிறார் கொட்டகொட

கொழும்பு,செப்.15


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கொட்டகொடவின் பெயர் அடங்கிய ஆவணம், தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. அஜித் நிவாட் கப்ரால் பதவி விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப் பினர் வெற்றிடத்துக்கு ஜயந்த கொட்டகொட பரிந் துரைக்கப்பட்டுள்ளார். அதற்குரிய ஆவணம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவால் தேர்தல் ஆணைக்குழுவிடம் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச்செயலாளர் சட் டத்தரணி சாகர காரியவசம் அதற்குரிய ஆவணத்தை, தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பித்தார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தேர்தல் ஆணைக்குழு கூடி ஆராய்ந்ததன் பின்னர், ஜயந்த கொட்டகொ டவை நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று ஆபத்திலிருந்து இலங்கை மீளவில்லை

## இலங்கை மருத்துவர் சங்கம் சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 15**

**இலங்கையானது கொரோனாத் தாக்கத்தின் சிவப்பு எச்சரிக்கை வலயத்திலேயே இன்னும் இருக்கின்றது. எனவே, மற்றுமொரு அலை உருவாவதை தடுப்பதற்கு அனைத்துவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை மருத்துவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'நாடு என்ற வகையில் நாம் இன்னமும் எச்சரிக்கை மட்டத்திலிருந்து மீளவில்லை. நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். 150 உயிரிழப்புக்களும் பதிவாகின்றன. எனவே, அவதான மட்டத்திலிருந்து மீண்டுவிட்டோம் என்பதற்கான சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. சிவப்பு எச்சரிக்கை வலயத்திலேயே நாடு இன்னமும் இருக்கின்றது. எனவே, அரசும், நாட்டு மக்களும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மற்றுமொரு அலை உருவாவதற்கு இடமளிக்ககூடாது. குறிப்பாக மற்றுமொரு அலை உருவாவதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும், என்றார். அதேவேளை, நாட்டில் 4 வாரங்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையிலிருப்பதால் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு வீதத்தில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டை கட்டங்கட்டமாக திறக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என நம்புகின்றோம். தடுப்பூசித் திட்டத்தை முன்னெடுப்பதுடன், இதர சுகாதார விடயங்களையும் முறையாக பின்பற்ற வேண்டும், என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (ஒ-44)

# வடபிராந்திய இ.போ.ச.வுக்கு வடக்கு பொறியியலாளராக பெரும்பான்மை இனத்தவர்

*தகுதியுள்ள தமிழருக்கு வாய்ப்பு மறுப்பு*

யாழ்ப்பாணம், செப்.15

வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்து சபை பொறியியலாளராகப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பொறியியலாளராகக் கடமையாற்றிய எஸ். பாஸ்கரன் ஓய்வுபெற்ற நிலையில், திருகோணமலையில் இதுவரை கடமையாற்றிய பெரும்பான்மையினத்தவர் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதவிக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள 7 சாலைகளில் பணியாற்றும் சாலைப் பொறியியலாளர்கள் தகுதியுடன் உள்ளபோதும், வெளி மாவட்டம் ஒன்றில் இருந்து பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு பிராந்திய சாலைகளில் பிராந்தியப் பொறியியலாளராக நியமனம் பெறுபவர்கள் சேவைக்காலம் மற்றும் மொழியறிவு என்பன பரிசீலிக்கப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவது வழமை. தற்போது நியமனம் பெற்றவர் எந்தவிதமான போட்டிப் பரீட்சைகளும் இடம்பெறாமல் அரசியல் கட்சி ஒன்றின் தொழிற்சங்கத்தின் பின்னணியில் பின்னணியில் நியமிக்கப்பட்டுள்ளார் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தலையிட்டு, வடக்கில் உள்ள தகுதியான ஒருவரை இந்தப் பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தற்போது பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையினத்தவர் முன்னர் அநுராதபுரம் சாலைப் பொறியியலாளராகக் கடமையாற்றியபோது பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடையமுன்னரே அவர் வடக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-20)

# கடலட்டை பிடிக்க சென்றவர் மாயம்!

*3ஆவது நாளாகவும் தேடுதல்*

யாழ்ப்பாணம், செப்.15

வடமராட்சி கிழக்கு, குடாரப்புக் கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்காகக் கடலுக்குள் சென்றவர் மீளத் திரும்பாத நிலையில், அவரைத் தேடும் பணிகள் 3 நாள்களாக நடைபெறுகின்றன.

திருகோணமலை குச்சவெளியை சேர்ந்த 30 வயதுடைய சுயூட்கான் பாஜத்கான் எனும் இரண்டு குழந்தைகளின் தந்தையே காணாமல் போயுள்ளார்.

அவர் சுமார் 80 அடி ஆழத்தில் ஒட்சிசன் சிலிண்டருடன் சென்று அட்டைகளை பிடித்துவந்து படகில் வைத்துவிட்டு இரண்டாவது ஒட்சிசன் சிலிண்டரை எடுத்துக் கொண்டு மீண்டும் கடலிலுக்குள் சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் அவர் திரும்பாததால் கயிற்றை இழுத்த போது, கயிறும், கடலட்டையும் மட்டுமே வந்துள்ளன. மீனவரைக் காணவில்லை.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டு, கடற்படையினரும், மீனவர்களும் தேடுதல் நடத்திய போதும் காணாமல் போனவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நேற்று மூன்றாவது நாளாகவும், கடற்படையினரும், மீனவர்களும் தேடுதல் நடத்தினர். எனினும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. (எ-113)

# போதியளவு எரிபொருள் கையிருப்பில் இருக்கிறது

## ஆளும்கட்சி அமைச்சரின் கூற்றை மறுக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, செப். 15

நாட்டில் எரிபொருளுக்கு எவ்விதத் தட்டுப்பாடும் இல்லை. தேவையானளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது நாட்டில் எரிபொருள் மற்றும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்த கருத்துத் தொடர்பில எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை. அது தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டியதில்லை. பாவனைக்குத் தேவையான அளவு இருப்பில் உள்ளது. அத்துடன், இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றும் அமைச்சர் கூறினார்.

அதேவேளை, நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு இதன்போது பதிலளித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும, 'சில பொருள்களுக்கு தட்டுப்பாடு இருக்கக்கூடும் என நாமும் கருதுகின்றோம். எனினும், 21 ஆம் திகதிக்குப் பிறகு இந்நிலைமை மாறும். நாம் அனைவரும் இணைந்து நிலைமையைச் சீர்செய்ய வேண்டும்- என்றார். (ஒ-44)

# 10 யோக்கட் வாங்கினால் ஒரு அங்கர்

சாவகச்சேரி, செப்.15

சாவகச்சேரியில் நேற்று 10 யோக்கட் பைக்கற்றுகள் வாங்குபவர்களுக்கு ஒரு அங்கர் 385 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது அங்கர் பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில், சாவகச்சேரியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நிறுவனத்தால் அங்கர் வழங்கப்பட்டது. அங்கர் கடைகளில் உள்ள தகவல் அறிந்து மக்கள் அதனை வாங்குவதற்கு கூடினர். ஆனால் 10 யோக்கட் வாங்கினாலே ஒரு அங்கர் தருவோம் என்று நிபந்தனை விதித்த வியாபாரிகள், அங்கர் பால்மாவை 385 ரூபாவுக்கு விற்றுத் தீர்த்தனர். (எ-9)

# வர்த்தகர் மீது தாக்குதல் சந்தேகநபர் ஒருவர் கைது

கொடிகாமம்,செப்.15

வர்த்தகர் ஒருவர் மீது வீடு புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வரணி இயற்றாலைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

வரணி இயற்றாலையைச் சேர்ந்த அ.சுபிர்ஸ் என்பவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

6 பேர் கொண்ட குழுவினர் கொட்டன் பொல்லுகளோடு வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். அவரது கைத் தொலைபேசியையும் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். கடை உரிமையாளர் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார், தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியால் மலட்டுத்தன்மை?

## வதந்திகளை நம்பாதீர்கள் என்கிறார் சன்ன ஜயசுமன

கொழும்பு, செப்.15
கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் மலட்டுத்தன்மை ஏற்படும், கருத்தரிக்க முடியாத நிலை உருவாகும் என்றெல்லாம் பரப்பப்படும் வதந்திகளால் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் இளைஞர், யுவதிகளுக்கு மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. தேவையற்ற அச்சம் வேண்டாம். கட்டாயம் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுங்கள்.
இவ்வாறு இளைஞர், யுவதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
சில பகுதிகளில் இளைஞர், யுவதிகள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். கொவிட் 19 தடுப்புக்கான தடுப்பூசியை ஏற்றிக்கொண்டால் பாலியல் சக்தி குறைவடையும், கருத்தரிக்க முடியாதநிலை ஏற்படும் என சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் பரப்புரையும் இந்தத் தயக்கத்துக்குக் காரணம். இவ்வாறான தகவல்கள் போலியானவை. தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் மலட்டுத்தன்மை ஏற்படும் என உலகில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே, உங்களுக்கு கிடைக்கும் தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொள்ளுங்கள்.- என்றார். (எ-44)

# இலங்கையில் மீண்டும் தலைதூக்கும் டெங்கு




கொழும்பு, செப்.15
நாட்டில் அண்மைக்காலமாக மீண்டும் டெங்கு நோய் தலைதூக்கியுள்ள நிலையில் பொதுமக்கள் தமது சுற்றுப்புறச் சூழலை துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.
அந்தப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, நாட்டில் கடந்த 9 மாதங்களில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் 10 ஆம் திகதி வரை நாடு முழுவதும் 12 ஆயிரத்து 102 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 4 ஆயிரத்து 828 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். -என்றுள்ளது. (ஐ-இ)

# வவுனியாவில் ஒரே நாளில் 69 பேருக்குக் கொரோனா

வவுனியா, செப்.15
வவுனியாவில் ஒரே நாளில் 69 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளில் 69 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
தொற்றாளர்களைத் தனிமைப்படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுயதனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதேவேளை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-4-110)

# பரீட்சைகளையும் புறக்கணிப்போம்

## அதிபர், ஆசிரியர்கள் போர்க்கொடி

கொழும்பு, செப்.15
**க.பொ.த** உயர்தர மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்குக் கடமையாற்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில்லை.
என்று ஆசிரியர், அதிபர்கள் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில், ஆசிரியர், அதிபர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையின் மற்றொருபடியாக இந்தப் புறக்கணிப்பை மேற்கொள்வோம்.
தொழிற்சங்க நடவடிக்கையால் பரீட்சை விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை ஒத்திவைப்பதன் மூலம் அரசு தனது தொழில்முறைத் திட்டத்தை நாசப்படுத்த முயற்சிக்கின்றது.
விண்ணப்பங்களை சமர்ப்பிக்காமைக்கு அதிபர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.
அதிபர்களை மிரட்டுவதற்காக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இது தொழிற்சங்க நடவடிக்கையை சீர்குலைக்கும் ஒரு தெளிவான முயற்சி. பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட உள்ள நிலையில் பரீட்சைத் திகதிகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை -என்றார்.
அதேவேளை இந்த ஆண்டு க.பொ.த உயர்தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான, அதிபர்கள், ஆசிரியர்களின் மேற்பார்வைக் கடமை விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதியும் இன்றுடன் முடிவடைகின்றது. (ஒ-4)

# சா/த பரீட்சையின் பெறுபேறு வெளியீடு

## அடுத்த வாரம் இறுதி முடிவு

கொழும்பு, செப்.15
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக அடுத்த வாரம் இறுதியில் முடிவு எடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அழகியல் பாடங்களின் நடைமுறைத் தேர்வுகள் இதுவரை நடத்தப்படவில்லை. இதனாலேயே கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (ஐ-இ)

# மருத்துவமனையில் இருந்த சடலத்தைக் காணவில்லை

கொழும்பு, செப்.15
பி.சி.ஆர். பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட சடலம் ஒன்று காணாமல் போயுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
எல்பிடிய ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த கே.வி. பிரேமதிலக என்ற 77 வயதுடைய முதியவரின் சடலமே இவ்வாறு காணாமல் போயுள்ளது.
திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக வீட்டிலேயே அவர் உயிரிழந்திருந்த நிலையில், பி.சி.ஆர். பரிசோதனைக்காக சடலம் எல்பிடிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.
இந்த நிலையிலேயே சடலம் காணாமல் போயுள்ளதாக மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-இ)

# மாட்டிறைச்சியுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், செப்.15
சட்டவிரோதமாக மாட்டை வெட்டி இறைச்சியாக்கினார் என்ற குற்றச்சாட்டில், இளவாலை பெரியவிளான் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்து 12 கிலோ கிராம் மாட்டு இறைச்சி கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (ஒ-4-125)

# வீட்டிலிருந்து துப்பாக்கி மீட்பு

அனுமதியற்று இடியன் துப்பாக்கியை வீட்டில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியிலுள்ள வீட்டிலிருந்து இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டது.
சந்தேகநபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-113)

# மாலைதீவுக்கு மணல் ஏற்றியமை உண்மைக்குப் புறம்பான தகவல்

## சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

மாலைதீவில் தீவு ஒன்றை உருவாக்குவதற்காக இலங்கையில் இருந்து மணல் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என்று புவிச்சரிதவியல் மற்றும் அளவை சுரங்க பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் சஜ்ஜன டி சில்வா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; மாலைதீவில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை நிறுவனம் ஒன்றுக்கு தேவையான வர்த்தக ரீதியிலான மணல் தொகை மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
அந்நேரம் குறித்த மணலானது குழாய் இணைப்பு மற்றும் நீர்நிலைகளை நிரப்புவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.
அதற்காக மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நிலையில், க்யூப் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் அறவிட்டப்பட்டுள்ளது. இதை விடுத்து, மாலைதீவில் தீவு ஒன்றை உருவாக்குவதற்காக இலங்கையில் இருந்து மணல் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது. -என்றார். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையத்தில் இடம்பெறும் பாலியல் குற்றங்கள் தொடர்பில் 3 மாதத்தில் 3000 முறைப்பாடுகள்

கொழும்பு,செப்.15

பாலியல் குற்றங்கள், ஆபாச வீடியோக்கள் மற்றும் ஒளிப் படங்களை இணையத்தில் வெளியிடுவது தொடர்பாக கடந்த 3 மாதங்களுக்குள் சுமார் 3 ஆயிரம் முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தத் தகவலை சி.ஐ.டியின் கணினி குற்றப் பிரிவு வெளி யிட்டுள்ளது.

15 வயது சிறுமியை இணை யத்தின் மூலம் விற்பனை செய்து, துஷ்பிரயோகம் செய்த முறைப்பாட்டில் சுமார் 70 சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் பேஸ்புக் மூலம் இடம்பெறும் துஸ்பிர யோக சம்பவங்கள் தொடர்பில் சுமார் 900 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பேஸ்புக் கணக்குகளை ஹேக் செய்வது மற்றும் போலிக் கணக்குகளை பராமரிப்பது தொடர்பாக சுமார் 700 முறைப்பாடுகள் கிடைக்க ப்பெற்றுள்ளன என்று சி.ஐ.டி யின் கணினி குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## சுசந்திகா ஜெயசிங்க தொற்றால் பாதிப்பு



கொழும்பு,செப்.15

ஒலிம்பிக் பதக்கம் வென்ற இலங்கை யின் முன்னாள் வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்க கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அத்துடன் சுசந்திகாவின் இரண்டு குழந்தைகளும் கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-இ)

## நாட்டை முழுமையாக திறக்க சாத்தியமில்லை



கொழும்பு,செப்.15

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், நாட்டை முழு மையாக திறப்பதற்கான சாத்தியம் இல்லை என்று மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து 100 வீதம் திருப்தியடைய முடியாது. எனவே அனைவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும்.


கடந்த முறை முடக்கி பின்னர் நாட்டைத் திறந்த போது காணப்பட்ட நிலைமையை விட, நாளாந்தம் அடை யாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண் ணிக்கை இரண்டு, மூன்று மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது.

அதனால் நாட்டை மீளத் திறப்பதற்கான சூழ்நிலை இதுவரையில்லை. எனினும் அவ்வாறான சூழ்நி லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.

தொற்றாளர்கள் எண்ணிக்கையும், உயிரிழப்புக்க ளும் குறைவடைந்துள்ளதால், நாட்டை மீளத் திறக்க முடியும் என்று கருத முடியாது. வைரஸ் பரவல் கட் டுப்பாட்டில் இல்லை என்பதே உண்மை - என் றார். (ஒ-4)

# சீனி விலையேற்றத்துக்கு வங்கிகளும் காரணம்!

### இறக்குமதியாளர் சங்கம் விளக்கம்



**கொழும்பு, செப்.15**

**பல தனியார் வங்கிகள் இறக்குமதியாளர்களுக்கு வெளி நாட்டு நாணயம் தொடர்பாக கடுமையான சட்டவிதி களை நடைமுறைப்படுத்தியதால் சீனி மற்றும் அத்தியாவ சியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று அத்தியாவசிய பொருள்கள் உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; சீனி மற்றும் இதர அத்தியாவசிய உணவுப் பொருள்களின் இறக்கும தியின்போது, அமெரிக்க டொலர் 190 ரூபாவாக இருந்தது. நாணய மதிப்பு சரிவு மற்றும் நெருக்கடி அதிகரித்ததால், சீனியை மட்டும் இறக்குமதி செய்வதை அரசு நிறுத் தியது.

உணவு இறக்குமதியாளர்களுக்கு தனியார் வங்கிகள் வழங்கிய ஆறு மாத கடன்களுக்கு டொலருக்கு எதிராக அதிக ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கும் என்று உணவு இறக்குமதியாளர்கள் முன்கூட்டியே எச்சரித்ததால், உணவு இறக்குமதி யாளர்கள் சீனியைச் சேமித்து வைத்தனர்.

தனியார் வங்கிகள் முன் கணித்த படி டொலர் உயர்ந்துள்ளது. டொலர் 190 ரூபாயாக இருந்த காலத்தில் திறந்த கடன் பத்திரத்துக்கு இப் போது 236 ரூபா செலுத்தி துறை முகத்தை விட்டு பொருளை வெளியே எடுக்கவேண்டியிருந்தது.

அதனால் சீனியின் விலைகளை அதிகரிக்க வேண்டிய தேவை தோன்றியது.

இது தவிர, கொரோனாத் தொற் றால் உலக சந்தையில் உணவுப் பொருட்களின் விலை உயர்வு, கப் பல் செலவுகள் அதிகரிப்பு உள்ளூர் மற்றும் சர்வதேச வரிகளின் அதிக ரிப்பு ஆகியவை சீனியின் விலை அதிகரிப்புக்குக் காரணமாயின.

அத்தியாவசிய உணவுப் பொருள் களை வழங்குவதற்கான அவசர கால விதிமுறைகளைக் கொண்ட ஜனாதிபதி அண்மையில் வெளி யிட்ட வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம் அதிகூடிய விலையில் இறக்குமதி செய்யப்பட்ட சீனியை அரசு கையகப்படுத்துவதில் எந்த வித நியாயமுமில்லை என தொழிற் சங்கம் கூறுகிறது.

அரசாங்கத்தால் கையகப்படுத்தப் பட்ட சீனிக்குப் பணம் தரப்படும் என்று அரசு கூறியிருந்தாலும், எவ்வளவு பணம் தரப்படும் என்பது குறித்து அறிவிப்பு எதுவும் வெளி யிடப்படவில்லை - என்றார்.(எ-சி)

## தவறாக விளங்கிய கர்ப்பிணிகள் கருவைக் கலைப்பதற்கு முயற்சி!



கொழும்பு, செப்.15

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும்வரை கர்ப் பம் தரிப்பதை ஒருவரும் தாமதப்படுத்தவேண்டும் என்று அண்மையில் விசேட வைத்தியர் கோரிக்கை விடுத்திருந்தார். அந்த கோரிக்கையைத் தவறாகப் புரிந்துக் கொண்ட கர்ப்பிணித் தாய்மார்கள் வயிற்றில் வளரும் கருவை கலைப்பதற்கு மருத்துவர்களை நாட ஆரம்பித்துள்ளனர்

இவ்வாறு மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லென ரோல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது; இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்கள் பலர் தங் கள் வயிற்றில் வளரும் கருவைக் கலைக்க மருத் துவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும்வரை கர்ப்பம் தரிப்பதை ஒரு வருடம் தாமதப்படுத்த வேண்டும் என்று அண்மையில் விசேட மருத்துவர் கோரிக்கை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கை யைத் தவறாகப் புரிந்துக் கொண்டமையால் கர்ப் பிணித் தாய்மார்கள் வயிற்றில் வளரும் கருவைக் கலைக்க வைத்தியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைச் சட்டத்துக்கமைய தாயின் உயிருக்கு ஆபத்தாக இருந்தால் மாத்திரமே கருவைக் கலைப் பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று உலகுக்கு வந்த புதிய நோயாகும். உலகம் முழுவதும் அதன் செயற்பாடு பற்றிய வரையறுக் கப்பட்ட தரவுகள் மாத்திரமே இன்னமும் உள்ளது. இன்னும் ஒரு வருடத்துக்குள் விஞ்ஞானிகள் அதற்கு புதிய தடுப்பூசி அல்லது மருந்தை உரு வாக்க முடியும்.

ஒருவருட கர்ப்பத்தைத் தாமதப்படுத்துவது தாய்க் கும் கருப்பையில் வளரும் குழந்தைக்கும் நன் மையை ஏற்படுத்தும் என நிபுணர் தனது தனிப்பட்ட கருத்தைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளா மல் உடனடியாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வயிற்றில் வளரும் குழந்தை அல்லது தாய்க்கு கொரோனாத் தொற்றால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைத்துக்கொள்ளமுடியும் - என்றார். (எ-இ)

## தம்புள்ளை பொ.ம.நி. திறக்கும்

கொழும்பு,செப்.15

தம்புள்ளை நகரிலுள்ள அனைத்து மொத்த விற்பனை நிலையங்களும் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளன.

தம்புள்ளை பொருளாதார மையத்தில் பதிவான நெரிசலைக் கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து மொத்த விற்பனை நிலை யங்களையும் மூடுவதற்கு பிராந்திய கொவிட் கட்டுப்பாட்டு குழு முடிவு செய்தது.

எவ்வாறாயினும், நாடு முழுவதும் உள்ள நகரங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்க தம்புள்ளையில் உள்ள மொத்த வியாபார நிலையங்க ளைத் திறக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளதால், அங்கு வியாபா ரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## இலங்கை வருவோருக்கு விரைவான பரிசோதனை

கொழும்பு,செப்.15

இலங்கைக்கு வருகை தரும் பயணிகளுக்கு விரைவான கொவிட் சோதனைகள் முன் னெடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பா ளரான மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர் சோதனை முடிவுகள் தாமதமாவதால் சில பயணிகள் சோதனை முடிவு கிடைக்கும் வரை ஒரு நாள் ஹொட்டலில் தங்குவதற்கு அதிகளவு பணத் தைச் செலவிடுகின்றனர்.

அதனால் பி.சி.ஆர் சோதனை களுக்கு மாறாக விரைவான சோதனைகளை முன்னெடுக் கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளி யேறும் பயணிகளுக்கு விரை வான சோதனைகள் மேற் கொள்ளப்பட்டாலும், இலங் கைக்கு வருகை தரும் பய ணிகளுக்கும் இதேபோன்ற செயல்முறை இன்னும் அங்கீ கரிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் விரைவான சோதனைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கோரிய சஜித் மீது சீறிப்பாயும் மொட்டுக் கட்சி!



கொழும்பு, செப்.15
நெருக்கடியான சூழ்நிலையிலும், அதிகார ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கோருவது தவறானதொரு தலைமைத்துவப் பண்பாகும் என்று அமைச்சர் காமினி லொக்குகே விமர்சித்துள்ளார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தி நாட்டை இயல்பு நிலைமைக்கு கொண்டு வருவதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசு போராடிக்கொண்டிருக்கின்றது. அதன் பயனாக இன்று தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் சிலர் பதவி விலகுகின்றனர். சிலர் பொருத்தமற்ற விதத்தில் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். மக்கள் ஆணையைக் கோரி, ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகின்றார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. மாறாக அதிகார ஆசையால் தேர்தலைக் கோருகின்றனர்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவானது தேர்தலுக்கு அஞ்சும் கட்சி கிடையாது.

உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும் என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூறிக்கொள்கின்றோம். நல்லாட்சியின்போதுதான் மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்பட்டது. அந்தத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை.

நாட்டின் கடைசிக் குடிமகனுக்கு தடுப்பூசி ஏற்றும்வரை தான் ஏற்றிக்கொள்ளப்போவதில்லை என சஜித் சவால் விடுத்திருந்தார். பின்னர் இராணுவ வைத்தியசாலைக்குச்சென்று அதை ஏற்றிக்கொண்டார். இன்றும் பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிடுகின்றார். -என்றார். (எ-44)

# தரவுகள் அழிக்கப்பட்டமை மருத்துவ மாஃபியா சூழ்ச்சி!



**கொழும்பு, செப்.15**

**ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகள் அழிக்கப்பட்டமை ஔடதங்கள், மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்ததன் மூலம் சட்டவிரோதமாக பணம் ஈட்டிய மருத்துவ மாஃபியாவின் சூழ்ச்சி என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப்ப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

இந்த வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் புத்திகஶ்ரீராகல முன்பாக நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப்ப பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டுக்கு ஔடதங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் பெயர் மற்றும் அந்த நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட ஔடதங்கள், உபகரணங்களின் பெயர்களே அழிக்கப்பட்டுள்ளன. தரவுகள் அழிக்கப்பட்டதால் ஔடதங்களை வெவ்வேறு வர்த்தக நாமங்களில் இறக்குமதி செய்யும் ஔடத நிறுவனங்கள் தாம் விரும்பிய விலைகளில் அவற்றை விற்பனை செய்யும் அபாயம் காணப்படுகின்றது. இந்தத் தரவுக் கட்டமைப்பை பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் ஈபிக் லங்கா ரெக்னோலஜிஸ் நிறுவனத்துக்கே உள்ளது. அந்தப் பொறுப்பை நிறுவனம் முறையாக நிறைவேற்றவில்லை என்பதும் புலப்படுகின்றது. அது தொடர்பில் விரிவான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுக் கட்டமைப்பை புதுப்பிப்பதிலுள்ள சிக்கலை இரு தரப்புமே சீர்செய்ய வேண்டும்.

அதில் நீதிமன்றம் தலையிடும் அவசியமில்லை என்று தெரிவித்த கொழும்பு பிரதம நீதிவான் புத்திக்கஶ்ரீராகல, தரவுக்கட்டமைப்பை புதுப்பிக்க கடந்த 9 ஆம் திகதி நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தடையுத்தரவை நீக்கி உத்தரவிட்டுள்ளார். வழக்கின் பிரதிவாதியான தரீந்திர கல்பகே நீதிமன்றில் ஆஜராகாததால், அந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நீக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் கைவசம்

### மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப்.15
ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுத் தளத்தில் நீக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் நாட்டில் உள்ள மருந்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது என்று மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் கமல் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மருந்துக் கடை உரிமையாளர்கள் தரவுகள் அடங்கிய கோப்புகளை மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மருந்துக் கடைகள் மற்றும் மருந்து இறக்குமதி நிறுவனங்கள் உட்பட, நாடு முழுவதும் உள்ள 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மருந்தகங்கள் தரவுத்தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. -என்றார்.

அதேவேளை, கடந்த அரசின் காலத்தில் இலங்கையில் நோயாளிகளுக்கு வழங்கத் தடைவிதிக்கப்பட்ட சுமார் ஆயிரம் வகையான மருந்துகளும் இந்த தரவுத்தளத்தில் உள்ளன என்று மருந்து மற்றும் சுகாதார மேலாண்மை ஆலோசகர் டாக்டர் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

கேள்வி அறிவித்தல் நடைமுறையை மீறி அவசர கொள்முதலில் வாங்கப்பட்ட சில மருந்துகளும் நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட தரவுகளை மீண்டும் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மருந்து ஒழுங்குமுறை ஆணையம் மேற்கொண்டு வருகின்றது. தடை செய்யப்பட்ட மருந்துகளின் மீது அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-சி)

## சுற்றுலாவிகளால் மீண்டும் ஆபத்து

### சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப்.15
கண்காணிப்புப் பொறிமுறைகளற்று, சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்குள் அனுமதிப்பதால், கொரோனாத் தொற்று மேலும் தீவிரமடையும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹண தெரிவிக்கையில்,

சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிக்க உடனடியாக ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

சுற்றுலாத்துறையின் மூலம் இலங்கை வருமானம் ஈட்ட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கின்றோம். ஆனால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கு, சுற்றுலாக் குழுக்களை யார் வழிநடத்துகின்றனர் என்பதே எமது கேள்வி.

சுகாதாரப் பிரிவுகள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் தனிமைப்படுத்தல் அல்லது கண்காணிப்பு செயற்பாட்டில் ஈடுபடவில்லை.

சுற்றுலாக் குழுக்கள் நேரடியாக தங்கள் முகவர்கள் மற்றும் இலங்கை சுற்றுலாச் சபை மூலமே தனிமைப்படுத்தலை மேற்கொள்கின்றனர். அத்தகைய சுற்றுலாக் குழுக்கள் எங்கு பயணம் செய்கின்றனர். அவர்களின் பயணத் திட்டங்கள் மற்றும் அவர்கள் தங்கியிருக்கும் நாள்களின் எண்ணிக்கை தெரியவில்லை, இது பாதுகாப்பற்றது.

அதனால் தென்னாப்பிரிக்காவின் கொவிட் மாறுபாடு இது போன்ற சூழ்நிலைகளில் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கமுடியாது. டெல்டா மாறுபாடு வெளிநாட்டு மூலத்தின் மூலமே நாட்டுக்குள் நுழைந்தது என்று சந்தேகிக்கப்படுகின்றது. கடுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் டெல்டா வைரஸ் இலங்கைக்குள் நுழைந்துள்ளதை மறைக்க வேண்டாம். -என்றார். (ஒ-4)

## வவுனியாவில் குறைகின்றது கொரோனாத் தொற்று பரவல்

வவுனியா, செப்.15
வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கொரோனா பரவல் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 6 ஆயிரத்து 790 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 139 பேர் உயிரிழந்துள்ளனர். 973 பேர் இடைப்பராமரிப்பு நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆயிரத்து 194 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 49 பேர் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வவுனியாவுக்கு இதுவரை 1இலட்சத்து 81 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. 87 வீதமான முதியவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. 62 வீதமானவர்களுக்கு இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அதேநேரம், அத்தியாவசியப் பொருள்களுக்கு மாவட்டத்தில் பெரிதாகத் தட்டுப்பாடு நிலவவில்லை. -என்றார். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழர்களைக் கைகழுவும் மனித உரிமைகள் பேரவை


**2009**ஆம் ஆண்டு மிகமோசமான போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. தமிழர்கள் பேரச்சத்துடனேயே போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலப் பகுதிகளிலும் இலங்கைத் தீவில் வாழ நேர்ந்தது. அப்போதைய சூழலில், தமிழர்கள் தம்மை ஆசுவாசுப்படுத்திக் கொள்ளவும், நடைபெற்று முடிந்த இனவழிப்புக்கு நீதி கோரவும் சர்வதேச மன்றம் ஒன்று தேவையாக இருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் 2012ஆம் ஆண்டு முதலாவது தீர்மானத்தை நிறைவேற்றியது. இறுதிப் போரில் மனிதாபிமானமற்ற, மனிதகுலத்துக்கு ஒவ்வாத விடயங்கள் அரங்கேறின என்ற உண்மை உலக மன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஓர் இடமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாறத் தொடங்கியது. அவ்வாறு தமிழ் மக்களின் நம்பிக்கையை அங்கு குவிக்கச் செய்ததில் தமிழ் அரசியல்வாதிகளும் முதன்மையானவர்கள். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு ஒவ்வொரு தடவையும் தோல்வியடையும்போது தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் பூரிப்படைந்தனர். ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மண்குதிரை என்ற கசப்பான உண்மை காலப்போக்கில் புரியத் தொடங்கினாலும், மக்கள் முதுகில் சவாரி செய்யும் தமிழ் அரசியல் தலைமைகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

2015ஆம் ஆண்டு, மேற்குலகின் செல்லப்பிள்ளையாக நல்லாட்சி அரசு ஆட்சிப்பீடமேறியது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் போக்கும் மாறத் தொடங்கியது. இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கியது. அதுவும் பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் அதனை வழங்கியது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு தானும் இணை அனுசரணை வழங்கியது நல்லாட்சி அரசு. கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கும் இணங்கியது. ஆனால், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்தார். ரணில் அரசுடன் இணைந்து இரண்டு தடவைகள் அரசுக்கு கால அவகாசம் பெற்றுக் கொடுத்த கூட்டமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாக எதனையும் சாதிக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளாத காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை அமைத்ததைத் தவிர வேறு எந்த நகர்வுகளும் நடக்கவில்லை.இறுதியில் மைத்திரிபால சிறிசேன கூறியதைப்போன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்கவில்லை.

ராஜபக்ச அரசு மீண்டும் 2019ஆம் ஆண்டு நவம்பரில் ஆட்சிக்கு வந்தது. சீனாவின் கைப்பிள்ளையாக தன்னை வெளிப்படையாக அடையாளப்படுத்தி மேற்குலகைச் சீண்டியது. ஆனால் உலகளாவிய நெருக்கடிகளால், தனது போக்கை மாற்றியது.பஸில் ராஜபக்ச என்ற மேற்குலகைக் கவரும் முகத்தையும், ஜி.எல்.பீரிஸ் என்ற மேற்குலகின் நண்பனையும் களத்தில் இறக்கியது அரசு. அதன் ஊடாக வெற்றியையும் இம்முறை அரசு பெற்றுவிட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில், இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபயவின் கருத்தை வரவேற்றதுடன் அதனைச் செயலில் காட்டுமாறு கூறியிருக்கின்றார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை அரசு மீது நம்பிக்கை வைக்கும் அளவுக்கு அது நடந்திருக்கின்றது.

உள்நாட்டுப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட தரப்புக்கள் முழுமையாக நிராகரித்திருக்கும் நிலையிலும், இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வரவேற்றிருக்கின்றார். மேலும், இலங்கையின் நீதித்துறை மீதான நம்பகத்தன்மை இழக்கப்படுவதை சுட்டிக்காட்டும் ஆணையாளர், இலங்கை அரசின் உள்நாட்டு பொறுப்புக்கூறல் பொறிமுறையை வரவேற்பதானது ஒன்றுக்கொன்று முரணாக அமைவதுடன், வெளிப்படையாகவே பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் செயலாக அமைகின்றது. ஐ.நா. ஆணையாளர் இம்முறை தனது அறிக்கையில் தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விவகாரங்க ளைத்தாண்டியும், இலங்கையின் ஒட்டுமொத்த மனித உரிமை விவகாரங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார். தமிழர் விவகாரம் ஐ.நா.வில் தேயத் தொடங்குவதையே இது காண்பிக்கின்றது.

தமிழ் மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கேட்கும் தளம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையல்ல. பொறுப்புக்கூறலை வெற்றி கொள்ளும் இடமும் இதுவல்ல. இந்த உண்மையை இனியாவது மக்களுக்கு எடுத்துரைக்க தமிழ் அரசியல் தலைமைகள் முன்வரவேண்டும்.




# கட்டுக்குள் வருகிறதாம் கொரோனா

**கொழும்பு, செப். 15**



**தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருப்பதால் செப்ரெம்பர் இறுதியளவில் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் குறைவடையக்கூடும். சுகாதாரத் தரப்பினரின் யோசனைகள் மற்றும் சாதாரண மக்களின் வாழ்வாதாரம் என்ற இரு விடயங்களைக் கருத்திற்கொண்டே ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது நாட்டில் பெயரளவிலான ஊரடங்கு உத்தரவே நடைமுறையில் உள்ளது. அதனால் சாதக பலன் கிடைத்துள்ளதா, குறித்த ஊரடங்கு உத்தரவு எப்போது தளர்த்தப்படும் என எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'செப்ரெம்பர் 21 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தளர்வு இடம்பெறுமானால் அது தொடர்பில் அப்போது அறிவிக்கப்படும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கால் நாளாந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் ஏனைய சில தரப்பினரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவேதான் சில தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதார நிலையங்களைத் திறப்பதற்கும், ஏற்றுமதி சார் தொழில்துறைகளை இயக்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறையினரும் இயங்குகின்றனர். சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனை மற்றும் மக்களின் வாழ்வாதாரம் என இரு விடயங்களை அடிப்படையாகக்கொண்டே அரசு செயற்பட்டுவருகின்றது. ஊரடங்கு நடைமுறையிலிருப்பதால் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அதேபோல தடுப்பூசித் திட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பாக செப்ரெம்பர் இறுதி வாரத்தில் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையிலும் குறிப்பிட்டளவு வீழ்ச்சி ஏற்படும்.' - என்றார்.

(ஒ-44)

# மாதாந்தம் ரூ. ஒரு லட்சம் வருமானம் வரி அறவிடத் தீர்மானம் இல்லை

கொழும்பு, செப். 15

ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் மாத வருமானம் பெறுபவர்களிடமிருந்து 5 வீத வரியை அறிவிடுவதற்கு எவ்வித தீர்மானத்தையும் அரசு எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன் போது மாதம் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களிடமிருந்து 5 வீத வரி அறிவிடப்பட வேண்டும் என பந்துல குணவர்தனவால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் அரசு தீர்மானம் எடுத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'மேற்படி யோசனையானது அமைச்சர் பந்துல குணவர்தனவின் தனிப்பட்ட கருத்தாகும். அது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை. அவ்வாறு வரி அறவிடத் தீர்மானிக்கவும் இல்லை. அதேபோல மக்களால் செலுத்தப்படும் வரியை வீண்விரயமாக்கும் விதத்தில் அரசு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாது.' - என்றும் அமைச்சர் கூறினார்.(ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலிக்கண்ணீர் வடிக்கும் தமிழ் அரசியல்வாதிகள்

**கொழும்பு,செப்.15**

**இனச்சுத்திகரிப்புத் தொடர்பில் நீலிக்கண்ணீர் வடிக்கும் தமிழ் அரசியல்வாதிகள், கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகளை மறந்து விட்டனர் என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், ரெலோவின் பிரதித்தலைவருமான இந்திர குமார் பிரசன்னா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர், மக்களின் உணர்வுகளை மதித்து தங்கள் கருத்துக்களை வெளியிட வேண்டும். தாம் யதார்த்தமாகப் பேசுகின்றோம் என்ற எண்ணப்பாட்டில் தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டும் முகமாகச் செயற்படுதல் கூடாது.

அனைத்து இனங்களையும் மதிக்க வேண்டும் என்பது உண்மையான விடயமே. ஆனால் எம்மின மக்களைக் காயப்படுத்தி அதன் மூலம் மாற்றுச் சமூகத்தைத் திருப்திப்படுத்த எண்ணுவது எந்த வகையிலும் நியாயமாகாது. அண்மையில் எமது நாடாளுமன்ற உறுப்பினரொருவர் போர்க் காலத்தின் போது வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நடவடிக்கை இனச்சுத்திகரிப்பு என்ற வகையில் இடம்பெற்றது. இது குறித்து வெட்கப்படுகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தனியே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றே நாம் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுகின்றோம். எமக்கு மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதும் இல்லை, வாக்களிக்கவும் மாட்டார்கள். எனவே அவர்களைத் திருப்திப்படுத்த எமது சமூகத்தை நோகடிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

நாம் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள். எமது கருத்துக்கள் இரண்டு பிராந்தியங்களையும் சார்ந்தே இருக்க வேண்டும். வடக்கில் இடம்பெற்ற இனச்சுத்திகரிப்பு பற்றி நீலிக்கண்ணீர் வடிக்கும் எம்மவர்கள், கிழக்கில் மாற்றுச் சமூகத்தால் இடம்பெற்ற இனஅழிப்பு தொடர்பில் ஏன் கருத்திட மறுக்கின்றார்கள்.

வரலாறு என்பது அனைவருக்கும் ஒன்றே. ஓர் இனத்தை அழிக்காமல் அவர்களை உயிருடன், பாதுகாப்பாக வெளியேற்றியமை தொடர்பில் வெட்கப்படும் நம்மவர்கள் எமது இன மக்களை கொத்துக் கொத்தாகக் காட்டிக் கொடுத்தும் எல்லைப் புறக் கிராமங்களில் வெட்டியும், சுட்டும் இனஅழிப்புச் செய்த விடயத்துக்கு என்ன சொல்லப் போகின்றார்கள். எத்தனை அழிப்புகள் கிழக்கில் இடம்பெற்றன.

ஊர்காவற்படை, புலனாய்வாளர்கள் என்ற பெயரில் எத்தனையோ அழிப்புக்கள் கிழக்கில் இடம்பெற்றன. இந்த அழிப்புக்களில் கிழக்கு மாகாணத்தில் எத்தனை தமிழ் கிராமங்கள் இல்லாமல் போயிருக்கின்றன. இவைகளைப் பற்றியும் சற்று அறிந்து கொள்ள வேண்டும். வெறுமனே தாம் அறிந்த விடயங்களை வைத்து மாத்திரம் கருத்திடல் தமிழ்த் தேசியத்துக்குப் பொருந்தாத ஒன்றாகும். கிழக்குத் தமிழ் மக்களையும் நினைவில் வைத்து தங்கள் கருத்துக்களைப் பதிவிடுங்கள் - என்றார். (ஒ-4)

## ரூ.ஒரு லட்சத்துக்கு 5 வீதம் வரி அறவீடு

*அமைச்சர் யோசனை*

கொழும்பு,செப்.15

ஒவ்வொரு மாதமும் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக பணம் சம்பாதிப்பவர்களுக்கு 5 வீதம் வரி விதிக்க வேண்டும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அறவிடப்படும் வரியை, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற சமூக நல நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவேண்டும். இந்த வரி சமூகப் பாதுகாப்புக்கு பங்களிப்பானது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், சர்வதேச பாடசாலைகளில் பிள்ளைகளை இணைப்பவர்களுக்கும், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கும் வரி செலுத்த வேண்டுமா? இல்லையா? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## முகக்கவசத்தால் மற்றொரு தொற்று



கொழும்பு,செப்.15

இலங்கையில் கறுப்பு பூஞ்சைத் தொற்றுக்கு உள்ளான நோயாளர்கள் பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய்க்கும், கொரோனாத் தொற்றுக்கும் நேரடித் தொடர்பு இல்லாத போதும், நீண்ட நேரம் முகக்கவசங்களை அணிவதால் கறுப்பு பூஞ்சை நோய் பரவும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கறுப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவர் சிறுநீரகக் கோளாறு காரணமாக ஆபத்தான நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

அவருக்கு மூக்கின் உட்புறத்திலும், ஒரு கண்ணிலும் கறுப்பு பூஞ்சை தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் போன்று பல நோயாளிகள் சிகிச்சை பெற்றிருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. ஒரே முகக்கவசத்தை அல்லது அழுக்கு முகக்கவசத்தை நீண்ட நேரம் அணிந்திருப்பது கறுப்பு பூஞ்சைத் தொற்று ஏற்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4)

## தடுப்பூசி பெற்றவர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி அதிகம்

*ஏனையோருக்கு 11 மடங்கு பாதிப்பு*

கொழும்பு,செப்.15

கொரோனாத் தடுப்பூசி பெற்றவர்களை விட தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டால் 11 மடங்கு பாதிப்பை எதிர்கொள்வர் என்று சி.டி.சி நிலையப் பணிப்பாளர் ரோஷெல் வாலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடுமையான நோய் அல்லது இறப்புக்கு எதிராக கொவிட் -19 தடுப்பூசிகளின் செயற்றிறனை தெளிவாகக் காட்டும் ஒரு புதிய ஆய்வை, அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிலையம் வெளியிட்டுள்ளது.

சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக கொரோனாத் தொற்றால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை தடுப்பூசி ஏற்றலின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது மற்றும் இறப்பு என்பவற்றின் அளவிலும் சரிவை ஏற்படுத்தியுள்ளது என்று வொஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்து வைரஸ் தொற்றும் வீதமும் குறைகின்றது.

பல ஆய்வுகள் தடுப்பூசி ஏற்றலின் செயற்றிறன் அதிகரிப்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

இவை கொரோனா காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தடுப்பதில் 86 வீதம் பங்களிக்கின்றது. அதே போன்று அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவதை தடுப்பதில் 82 வீதம் பங்களிக்கிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். (ஒ-4)



## பூவரசங்குளம் பகுதியில் பெருமளவில் காடழிப்பு

*மக்கள் குடியேறினால் அராஜகம் செய்யும் வனத்துறையினர் இதைக் கண்டுகொள்ளாதது ஏன்?*

மக்கள் வாழும் கிராமங்களுக்குச் சென்று அவர்கள் வாழும் இடம் வனப்பகுதிக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து குடியிருப்புப் பகுதிகளில் எல்லைக்கல்லிடும் வனத்துறையினர், அதைவிட பெரியளவில் வவுனியா பூவரசங்குளம் பகுதியில் பிற இடத்தைச் சேர்ந்தவர்கள் வந்து காடு வெட்டி அழித்துவருவதைக் கண்டுகொள்ளாதது ஏன்? என கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சிலர் காடு அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும்நிலையில், வனத்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காது வாளாவெட்டியாகவுள்ளனர் என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பூவரசங்குளம் வடக்கு பகுதியில் குளத்துக்குச் சொந்தமான நீரேந்து பகுதிகள் மற்றும் காட்டுப்பகுதியைச் சேர்ந்த நிலப்பரப்பில் மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.

இதுவரையான காலப்பகுதியில் குறித்த பகுதியில் 60 ஏக்கருக்கும் அதிகமான காடுகள் அழிக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன. அத்துடன் கடந்த ஆறு மாதங்களாக காடழிப்பு இடம்பெற்று வருகின்றது. எனினும், வனத்துறையினர் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

காடழிப்பு மற்றும் குளம் சார்ந்த நிலங்கள் அபகரிப்பு தொடர்பாக, கமநல சேவைகள் திணைக்களம் உட்பட ஏனைய திணைக்களங்களின், அதிகாரிகள்கூட இவற்றைக் கண்டுகொள்ளவில்லை என கிராம மக்கள் சுட்டிக்காட்டினர்.

பூவரசங்குளத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதியில் சட்டவிரோதமாக வேலிகள் அமைக்கப்பட்டு பல ஏக்கர் காணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

குறித்த காடழிப்பு நடைபெற்று நிலங்கள் உழவு இயந்திரங்கள் மூலம் உழவு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. கொரோனா முடக்க காலத்தைப் பயன்படுத்தி காணி ஆக்கி ரமிப்பாளர்கள் காட்டுமரங்களை வெட்டிக் கடத்துகின்றனர். மரங்களுக்கு தீயிட்டு அழித்து வருகின்றனர்.

பூவரசங்குளத்தை அண்டிய பகுதியில் காடழிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தத்தருணத்தில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு, வேற்று பிரதேச நபர்களால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்காக உள்ளாடைகள்

## எதிர்த்தரப்பை விமர்சிக்கின்றார் அமைச்சர்



**கொழும்பு, செப். 15**

**இறக்குமதி செய்யப்படும் பல அத்தியாவசியமற்ற பொருள்களின் உத்தரவாதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ள போதும், எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரத்துக்காக உள்ளாடைகளை மாத்திரம் தெரிவு செய்துள்ளனர் என்று காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றபோதும் எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் பிரசாரத்துக்காக உள்ளாடை விவகாரத்துக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஆனால் மக்கள் உள்ளாடை இறக்குமதியைத் தடை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

நல்லாட்சி அரசு தேசிய உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வீட்டைச் சுத்தம் செய்யும் தும்புத்தடியைக்கூட பிற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்தது.

தேசிய பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழிப்பது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசின் பிரதான எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்கள் தடைசெய்யப்பட்டன.

இதனால் தேசிய உற்பத்தியாளர்கள் உற்பத்தித் துறையில் முன்னேற்றமடைந்தனர். எனவே, தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி பிரத்தியேகமாக இராஜாங்க அமைச்சுகளையும் அமைத்துள்ளார் - என்றார். (ம-4)

# வெளிநாடு செல்வோரின் பிரச்சினைகள் ஆராய்வு



கொழும்பு, செப். 15

வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லவிரும்புவோரின் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உடனடித் தீர்வை வழங்குமாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் இலங்கையர்களுக்கு அதிக கிராக்கியுள்ளது. அதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்பவர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.

நாட்டில் விமான வசதிகள் போதுமானதாக இல்லாவிட்டால் வெளிநாட்டு விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடி, தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்கவேண்டும். எனவே இது தொடர்பில் பிரச்சினைகளை ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ம-4)

# உலருணவு கையளிப்பு



மன்னார், செப். 15

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தில், 25 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

முசலி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மருதமடு பகுதியில் கொரோனாத்தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த 25 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கே உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மருத்துவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. மருத்துவர் கதிர்காமநாதனுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் ஒன்றாக கல்விகற்று தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் திரு கருணாநிதி இதற்கான நிதிப் பங்களிப்பை வழங்கியிருந்தார். (த-213)



கொடிகாமம், செப். 15

கொரோனாப் பேரிடரால் நோய்த் தொற்றுக்குள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டுள்ள 250 குடும்பங்களுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் புலம்பெயர் பழைய மாணவர்களால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 1980/1991 காலப்பகுதியில் கல்விகற்ற புலம்பெயர் பழைய மாணவர்களின் 10 லட்சம் ரூபா நிதியுதவியில் குறித்த உலருணவுப் பொருங்கள் வழங்கப்பட்டன. (த-159)

# அரச நிறுவனங்களையும் முற்றுகையிடவேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, செப். 15

தனியாரைப் போன்று, அரசக்குரிய வர்த்தக நிலையங்களிலும் கட்டுப்பாட்டு விலைகளை மீறி, அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனையும் அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவிக்கையில்,

அரசுக்குரிய வர்த்தக நிலையங்களில் அதிக விலைக்குப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டாலும், அவற்றுக்கு எதிராக எவ்வித சட்டநடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. ஆனால் தனியார் பிரிவுகளின் களஞ்சியசாலைகள் மற்றும் அரிசி ஆலைகளுக்குள் அதிகாரிகள் புகுந்து திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்கின்றனர்.

அதேபோன்று அரசக்குரிய இடங்களுக்குள்ளும் புகுந்து கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பது குறித்தும் ஆராய வேண்டும் - என்றார். (ம-4)

# தடுப்பூசிக்காக நாடு முடங்காது



*இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு,செப்.15

கொரோனாத் தடுப்பூசியை அனைவருக்கும் செலுத்தும் வரை, நாடு முடக்கப்படும் என்று வெளியாகும் தகவல் உண்மையில்லை என்று இராஜாங்க அமைச்சர் ஷன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வயதுக்கு மேற்பட்ட சுமார் 96 வீதமானோர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். எனினும் ஊசிக்கு அச்சம் கொண்ட சிலர் இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எந்தவித அச்சமும் இன்றி, அவ்வாறானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போது 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட தரப்பினருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 12 வயதுக்கு மேற்பட்ட தரப்பினருக்கும் விரைவில் தடுப்பூசி செலுத்தப்படும்.

அதேவேளை 12 வயதுக்குக் குறைவானோருக்கு தடுப்பூசி செலுத்த சில நாடுகள் ஆரம்பித்துள்ளன. இலங்கையிலும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

அதனால், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முடிவடையும் சரியான திகதியை தற்போதைக்கு அறிவிக்க முடியாது. எனினும் அதுவரை நாட்டை முடக்கி வைக்கோம்.

அவ்வாறான எந்தவொரு தீர்மானத்தையும் அரசு எடுக்கவில்லை - என்றார். (ஒ-4)

# கடற்கரைப் பாதையில் வேலி பேசாலை மீனவர்கள் பாதிப்பு

மன்னார்,செப்.15

கடற்கரைப் பாதையில் வேலியிடப்பட்டுள்ளதால் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பேசாலை காட்டாஸ்பத்திரி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் பேசாலை காட்டாஸ்பத்திரி கிராமத்தில் சுமார் 300 படகுகளில் மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கடற்கரைக்கு செல்லும் பாதையில் நீண்ட தூரத்துக்கு தனியார் சிலரால் வேலியிடப்பட்டுள்ளது.

இதனால் கடற்றொழிலாளர்களும் கடற்தொழிலுக்கு உதவிபுரியும் பெண்களும் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

தற்போது கடற்கரையிலிருந்து தூரத்தில் உள்ள தனிநபர்களின் காணிகளை கடற்கரை வரை எல்லை அமைத்து வேலிகள் அமைக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த பத்து வருடங்களாக கடற்கரை வீதி அமைத்துத் தருவதாக அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் வாக்குறுதி அளித்த போதும் இதுவரை எவ்வித பயனும் ஏற்படவில்லை.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளை எமக்கு பெற்றுத் தராத பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் சாத்வீகமான போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் - என்றனர். (ஐ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.டி.எச். மருத்துவமனையில்

# தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைகிறது

## ஒட்சிசன் தேவையும் கட்டுப்பாட்டில்

கொழும்பு, செப். 15

**அங்கொடை தொற்று நோய்களுக்கான நிறுவகத்தில் (ஐ.டி.எச் மருத்துவமனை) கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. நிலைமை படிப்படியாகக் கட்டுக்குள் இருக்கின்றது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் ஹசித அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், சில வாரங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் 230 தொற்றாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். தற்போது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்புக்களும் குறைவடைந்துள்ளன. ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் 30 முதல் 40ஆக குறைவடைந்துள்ளது. தற்போது மருத்துவமனையின் அனைத்து விடுதிகளுக்கும் போதுமான ஒட்சிசன் வசதிகளை வழங்குவதற்கு, முறையான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-4)

## மன்னார் மாவட்டத்தில் தொற்றால் 23 பேர் சாவு

*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*



மன்னார்.செப்.15

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் 23 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் 1966 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் ஒருவர் கொரோனாவால் உயிரிழந்ததைத் தொடர்ந்து தற்போது மன்னார் மாவட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் நேற்றுமுன்தினம் 6 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் மன்னார் பொது மருத்துவமனையில் 5 நபர்களும், விடத்தல்தீவு மருத்துவமனையில் ஒருவரும் என 6 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் - என்றார். (ஐ-60)

## சடலங்கள் தகனத்துக்கு தலா 5ஆயிரம் ரூபா ஒதுக்கீடு



கொழும்பு, செப். 15

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு, தலா 5 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அமைச்சுக்குரிய தகனசாலைகளின் செலவினத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே, இந்த நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முதற்கட்டமாக ஒரு கோடி, 20 லட்சத்து 85 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையில் தகனம் செய்யப்பட்ட 2 ஆயிரத்து 417 சடலங்களுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



## மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள்

கொழும்பு, செப். 15

இலங்கைக்கு மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நேற்றுமுன்தினம் கிடைத்துள்ளன.

அதற்கமைவாக 73 ஆயிரத்து 710 பைஸர் தடுப்பூசிகள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன. இவை உரிய தடுப்பூசி நிலையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## மற்றொரு பாடகருக்கும் கொரோனா



கொழும்பு, செப். 15

பிரபல பாடகரான சந்துஷ் வீரமன் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி, கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையுடன் தொடர்புடைய சிகிச்சை மையத்தில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

நாட்டின் மிகவும் பிரபலமான இசைக் குழுக்களில் ஒன்றான பி.என்.எஸ் குழுவின் முன்னணி உறுப்பினரான சந்துஷ் வீரமன், பாடகர் மற்றும் இசையமைப்பாளர் ஆவார். முன்னதாக, பி.என்.எஸ் உறுப்பினர் பாத்திய ஜெயக்கொடியும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

## ஒரு கிலோகிராம் நெல் 55 ரூபாவாக அதிகரிப்பு



கொழும்பு.செப்.15

ஒரு கிலோகிராம் நாட்டு நெல்லின் கொள் வனவு விலை 55 ரூபாவாக அதிகரிக் கப்படவுள்ளது. அதற்கமைவாக ஒரு கிலோகிராம் 50 ரூபாவாக இருந்த நாட்டு நெல்லின் கொள்வனவு விலை 55 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, விவசாயிகள் நெல்லின் கொள்வனவு விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைவாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (ஒ-4)

### குடும்பத்தில் மூவர் உயிரிழப்பு:

# கொரோனாத் தொற்று அச்சத்தால் தோண்டியெடுக்கப்பட்டது ஜனாஸா

கொழும்பு, செப். 15

புதைக்கப்பட்ட ஜனாஸாவொன்று, கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபரின் இறப்பு சாதாரண இறப்பென்று முதலில் கருதப்பட்டபோதிலும், அந்த இறப்பு கொரோனாவால் சம்பவித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டு ஜனாஸா மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம் வேப்பமடு பிரதேசத்திலுள்ள மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்ட 56 வயதுடைய நபர் ஒருவரின் ஜனாஸாவே, புத்தளம் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிவான் அசேல டி சில்வா முன்னிலையில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை 4ஆம் திகதி தனது வீட்டில் காலமான குறித்த நபரது ஜனாஸா, அன்றைய தினமே வேப்பமடு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. எனினும், குறித்த நபர் உயிரிழந்து இரண்டு நாள்களின் பின்னர் அவரது மனைவி (வயது - 51) மற்றும் அவரது மகள் (வயது - 37) ஆகியோர் அடுத்தடுத்து உயிரிழந்தனர். ஒரே நாளில் உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகிய இருவரினதும் ஜனாஸாக்கள், புத்தளம் தள மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன்போது அவ்விருவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகிய இருவரது ஜனாஸாக்களும் நல்லடக்கத்துக்காக புத்தளத்திலிருந்து ஓட்டமாவடிக்கு அனுப்பப்பட்டன.

இந்த நிலையில், 4ஆம் திகதி உயிரிழந்த முஹம்மட் நிஸ்தார் (வயது -56) என்பவருக்கும் கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது ஜனாஸா நேற்றுமுன்தினம் தோண்டியெடுக்கப்பட்டது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் முல்லாக்களின் மீள்வருகை



ஆப்கான் சமுதாயத்தின் சகல பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு பரந்தளவிலான அரசாங்கம் ஒன்றை தலிபான்கள் அமைப்பார்களா இல்லையா என்ற விவாதத்துக்கு அவர்களாகவே முற்றுப்புள்ளி வைத்துவிட்டதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆப்கானிஸ்தானின் புதிய நிர்வாகமான 'ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய இராச்சியம்' பற்றிய அறிவிப்பை தலிபான்களின் பேச்சாளரான முஜாஹித் கடந்த வாரம் வெளியிட்டார். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட 33 பேரில் 30 பேர் பஷ்தூன் இனத்தவர்கள், இருவர் தஜிக் இனத்தவர்கள், ஒருவர் உஸ்பெக் இனத்தவர். தலிபான் இயக்கத்தில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் பஷ்தூன்கள். அவர்கள் பல்வேறு இனத்தவர்களைக்கொண்ட ஆப்கான் சனத்தொகையில் சுமார் 40 சதவீதத்தினராக இருக்கிறார்கள். 1990களில் தலிபான்கள் அதிகாரத்தில் இருந்தபோது பிரத்தியேகமாக இலக்குவைக்கப்பட்டு தொல்லைகளுக்கும் பாரபட்சத்துக்கும் உள்ளாக்கப்பட்ட பெண்களும் ஹசரா, ஷியா சிறுபான்மை இனத்தவர்களும் புதிய அமைச்சரவையில் முற்றாக விலக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள். 17 அமைச்சர்கள் ஐக்கிய நாடுகள் சபையால் தடைவிதிக்கப்பட்ட பயங்கரவாதிகள் பட்டியலில் இருக்கிறார்கள்.

தலைமறைவாக வாழும் தலிபான்களின் அமீரான முல்லா ஹிபதுல்லா அகுண்சடா முமினீனாக (விசுவாசிகளின் தளபதியாக) இருப்பார். இந்தப் பட்டம் 1990களில் முல்லா ஒமர் பெற்றுக்கொண்டதாகும். தலிபான்களின் மையப்பிரிவினருக்கும் ஹக்கானிகளுக்குமே அமைச்சுப் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் ஆட்சிமுறைமை அடிப்படை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காதமைக்காக பேர்போன முன்னைய இஸ்லாமிய இராச்சியத்தை ஒத்ததாக அமைந்திருக்கிறது. இதன் மூலமாக உலகம் தங்களைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதைப் பற்றித் தங்களுக்குக் கவலையில்லை என்ற தெளிவான செய்தியை தலிபான்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றைய தலிபான் அதன் கடைசி அவதாரத்தை விடவும் மிகவும் பலம்பொருந்தியதாக தோன்றுகிறது. 1990களில் மூன்று நாடுகள் மாத்திரமே இஸ்லாமிய இராச்சியத்தை அங்கீகரித்திருந்தன தலிபான் ஒருபோதுமே ஆப்கானிஸ்தான் முழுவதையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் இல்லை. ஆனால், இப்போது சீனா, ரஷ்யா உட்பட கூடுதலான பிராந்திய வல்லாதிக்க நாடுகள் தலிபான்களுடன் ஊடாட்டங்களைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். நாட்டைத் தங்களது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருப்பதாகவும் தலிபான்கள் உரிமை கோரியிருக்கிறார்கள். பஞ்ஷிர் மாகாணமே இறுதியாக இருந்தது. அதுவும் கடந்த வார முற்பகுதியில் அவர்களிடம் வீழ்ச்சி கண்டுவிட்டது.

பலம்பொருந்திய தலிபான் புதிய அரசாங்கத்தை அமைத்திருக்கும் நிலையில் தனது பிடியை இறுக்கமாக்குவதற்கு முயற்சிக்கின்றது. 2001ஆம் ஆண்டில் தலிபான்கள் செய்ததைப் போன்று பஞ்ஷிரில் கிளர்ச்சியாளர்கள் மலைகளுக்குள் பின்வாங்கிச் சென்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு தலிபான்கள் செய்ததைப் போன்று தங்களை மீள அணிதிரட்டிக்கொண்டு திருப்பித்தாக்கலாம். நிர்வாகத்தில் ஷியாக்கள் முற்றாக விலக்கிவைக்கப்பட்டிருக்கின்றமையும் ஏனைய இனக்குழுக்கள் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றமையும் மிகவும் அண்மைக்காலத்திலேயே அவற்றின் தாக்கங்களை வெளிப்படுத்தக்கூடும்.

ஆப்கானிஸ்தானில் குறிப்பாக நகரங்களில் சிவில் சமூக அமைப்புகள் தோற்றம்பெற்றிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த அமைப்புகள் முல்லாக்களின் (மார்க்க அறிஞர்கள்) தலிபான் ஆட்சியை அமைதியாக ஏற்றுக்கொள்ளாமலும் போகலாம். பெண்களின் உரிமைகளுக்கு எதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்து காபூலிலும் வேறு நகரங்களிலும் ஏற்கனவே பெருமளவில் பெண்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். 1990களில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நினைத்துப்பார்க்கவே முடியாது.

தலிபான்கள் விவேகமானவர்களாக இருந்தால், நீண்டகாலப் போரின் காயங்களைக் குணப்படுத்துவதிலும் சிதைந்துபோய்க் கிடக்கும் அரசையும் சமுதாயத்தை மீளக்கட்டியெழுப்புவதிலும் கவனத்தைக் குவித்திருப்பார்கள். ஆனால், பஷ்தூன், இஸ்லாமிய, மதக்குழுவான தலிபான்கள் திட்டமிட்டு அதைச் செய்யக்கூடிய ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது.

*தி ஹிந்து ஆசிரிய தலையங்கம்*
***தமிழில் : அபர்ணா***

# ஜெருசலேம் ஒருபோதும் யூத மயமாகமாட்டாது

## இறந்துவிட்டார் எனக் கருதப்பட்ட அல் குவைதா தலைவர் காணொலியில்

**காபூல், செப். 15**

**ஜெருசலேம் ஒருபோதும் யூத மயமாக மாட்டாது. அதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று அல் குவைதா அமைப்பின் மூத்த தலைவர் ஜவாஹிரி காணொலியில் தோன்றித் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புடையவர்களில் ஜவாஹிரியும் ஒருவராக இருக்கின்றார். அல் குவைதா அமைப்பின் தலைவர் பின்லேடன் உள்ளிட்ட பலர் அமெரிக்காவால் கொல்லப்பட்ட நிலையில் ஜவாஹிரி தொடர்ந்து தலைமறைவாகவே வாழ்ந்தார். அவரை அமெரிக்காவால் கைதுசெய்யவோ அல்லது கொல்லவோ முடியவில்லை. ஜவாஹிரி சுகவீனம் காரணமாக உயிரிழந்தார் என்று கடந்த வருடம் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி அதாவது இரட்டைக்கோபுரத் தாக்குதலின் நினைவு நாளன்று காணொலியில் தோன்றிய ஜவாஹிரி, அதில் சில நிமிடங்கள் உரையாற்றியுள்ளார்.

அந்தக் காணொலியில், ஜெருசலேம் ஒருபோதும் யூதமயமாக்கப்படாது. அதற்கு அனுமதிக்க மாட்டோம். சிரியாவில் ரஷ்ய இராணுவத்தின் மீது அல் குவைதா அமைப்பு நடத்திய தாக்குதல் பாராட்டப்பட வேண்டியதொன்று - என்று ஜவாஹிரி மேலும் தெரிவித்தார். (ம)

# போர்த் தந்திரோபாயமாகவே பின்வாங்கிச் சென்றோம்

## தலிபான்களுக்கு 'செக்' கிளர்ச்சிப்படை அறிவிப்பு

காபூல், செப். 15

பஞ்ஷிர் பகுதியில் இருந்து திட்டமிட்டே பின்வாங்கினோம். போர்த் தந்திரத்தின் அடிப்படையிலேயே தலிபான்களை வரவழைத்தோம் என்று பஞ்ஷிர் மாகாணத்தின் கிளர்ச்சிப்படை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில், 'எங்கள் தலைவர்கள் இருவரும் வெளிநாடுகளுக்கு சென்று விடவில்லை. அவர்கள் மக்களுடன்தான் இருக்கிறார்கள். நெடுஞ்சாலைகள், நகரப்பகுதிகள் ஆகியவற்றை மட்டுமே தலிபான்கள் கைப்பற்றி இருக்கிறார்கள். மீதி உள்ள இடங்கள் எங்கள் கட்டுப்பாட்டில்தா ர் உள்ளன.

போர்த் தந்திரத்தின் அடிப்படையில்தான் நாங்கள் பின்வாங்கிச் சென்று தலிபான்களுக்கு வழிவிட்டோம். அவர்கள் சிங்கத்தின் குகையில் சிக்கியுள்ளனர் என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 1939 . 05 . 25

இறப்பு 2021 . 09 . 14

### திருமதி செல்வராசா பரிமளம்

யாழ்ப்பாணம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.செல்வராசா பரிமளம் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (2021.09.14) காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 805 7205

## மரண அறிவித்தல்



### வஸ்தியாம்பிள்ளை தேவதாஸ்

கிளாலி எழுதுமட்டுவாளை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை தேவதாஸ் கடந்த (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை-பிலோமினா தம்பதியரின் அன்புப் புதல்வனும், அன்ரனீற்றாவின் (பேபி) அன்பு கணவரும், மரிய கிறிஸ்ரி (ராணி-புத்தளம்), றீற்றா வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜீவதாஸ், செபஸ்தியன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியராசா, வில்பேட் ஆகியோரின் மைத்துனனும், சோபிகா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், லஸ்னிகாவின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கிளாலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (15.09.2021) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் இடம்பெற்று கிளாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### அமரர் தம்பிமுத்து கந்தையா

(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/அளவெட்டி சதானந்த வித்தியாலயம்)

தாவடியை பிறப்பிடமாகவும், அளவெட்டி கணேஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து கந்தையா அவர்கள் 13.09.2021 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை- மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் பாசமிகு கணவரும், கிருஷ்ணப்பிரியாவின் (பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ் பல்கலைக்கழகம்) அன்புத் தந்தையும், நிரஞ்சனின் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (13.09.2021) திங்கட்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# பொருள்களின் தட்டுப்பாடு 21க்குப் பின்னர் சீராகும்!

## அமைச்சர் டலஸ் உறுதி



**கொழும்பு, செப். 15**

**நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு நிலை எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் சீராகும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், செப்டெம்பர் 21ஆம் திகதி முதல் நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பும். பல வணிக நிறுவனங்கள் செயலற்ற நிலையில் இருக்கும் நேரத்தில் தற்போதைய நிலைமை புரிந்துகொள்ளத் தக்கது. நாடு ஓரளவு பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. நாடு நீண்ட காலத்துக்குப் பூட்டப்பட்ட நிலையில் இருந்தால், நிதி ரீதியாக பொதுமக்கள் மிகவும் கடுமையான கவலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றார். (ம-22)

## பருத்தித்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், செப். 15

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மந்திகை மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையின்போதே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்பில் இருந்தவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-26)


## கருத்தமர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சூம் செயலி ஊடான புற்றுநோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பிலான கருத்தமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகவிருந்த கருத்தமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் நாளை வியாழக்கிழமை மற்றும் மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய நாள்களில் முற்பகல் 9 தொடக்கம் மதியம் 12 வரை நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ரி)

## மலிங்க ஓய்வு!




கொழும்பு, செப். 15

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வுபெறும் முடிவை அறிவித்தார் மலிங்க. இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான அணியில் மலிங்க இடம்பெறவில்லை. இந்த நிலையிலேயே தனது ஓய்வு முடிவை அவர் அறிவித்தார்.

ரி20 உலகக்கிண்ணத்தை இலங்கை அணிக்குப் பெற்றுக் கொடுத்த தலைவராக மலிங்க உள்ளார். அத்துடன் நெருக்கடியான நேரத்தில் தனது பந்துவீச்சின் மூலம் இலங்கை அணிக்குப் பெரியளவில் அவர் பங்காற்றியுள்ளார். 'ஜோக்கர் கிங்', 'டெத் ஓவர் ஸ்பெஷலிஸ்ட்' என்றும் மலிங்க சர்வதேச அரங்கில் அழைக்கப்படுகின்றார். துடுப்பாட்ட வீரரின் பாதங்களுக்கு கீழா பந்தைச் செலுத்துவதில் சிறப்புத் திறனைக் கொண்டிருந்தமையாலும், ஆட்டத்தின் இறுதிக்கட்டங்களில் பந்துவீச்சில் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றமையாலும் அவருக்கு இந்தப் பெயர்கள் வழங்கப்பட்டன.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும், தான் விளையாடிய கழக அணிகளுக்கும் தனது நன்றியை தன் சமூக வலைத்தளங்கள் மூலமாக மலிங்க தெரிவித்துள்ளார். (ம)

முதலாம் பக்கத்தொடர்ச்சி.....

## தமிழ்....

தனது சமூக வலைத்தளத்தில் இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வெளியிட்டுள்ள பதிவில், அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அங்கு தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட வைத்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். கடந்த 12ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது அராஜகமானது. இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று அவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்றார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மதுபோதையிலேயே அவர் சிறைச்சாலைக்குச் சென்றார் என்றும், அரசியல் கைதியொருவரின் பெயரை அவர் குறிப்பிட்டு வினவினார் என்றும் தெரியவருகின்றது. முன்னதாக வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் இவ்வாறு லொகான் ரத்வத்த சென்றுள்ளார். அதன் தொடர்ச்சியாகவே அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார். தனது நண்பர்கள் சகிதமே லொகான் ரத்வத்த சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார் என்றும் தெரியவருகின்றது.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தவின் மகனே லொகான் ரத்வத்தயாவார். சந்திரிகாவின் மாமனாரே அனுருத்த ரத்வத்தயாவார். அனுருத்த ரத்வத்த விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை தீவிரமாக முன்னெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26.04.1939 — மறைவு 15.09.2020



அமரர்

### திருமதி செல்வரத்தினம் சிவமணி

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த எம்
அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களைவிட்டுப்பிரிந்து ஓர் ஆண்டு அல்ல
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது அம்மா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

22, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 5975589

கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மருத்துவமனையின் கழிப்பறையில் கைக்குண்டு

கொழும்பு, செப். 15

நாராஹென்பிட்டியில் உள்ள மருத்துவமனையின் கழிப்பறையில் கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது. தனியார் மருத்துவமனையொன்றின் முதலாவது மாடியில் அமைந்துள்ள கழிப்பறையிலேயே மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டது. இதையடுத்து மருத்துவமனையை அண்டிய பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 06 . 04 . 1943 — மறைவு 16 . 08 . 2021



### திருமதி தங்கம் கந்தையா

மீளாத்துயில் கொண்டு எமை ஆறாத் துயரில்
ஆழ்த்திச் சென்ற உம் கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய - எங்கள்
கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.

எம் குடும்பத் தலைவி நோயுற்றிருந்தபோதும், மறைவுச் செய்தி அறிந்த போதும் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட அயலவர்கள் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

பட்டினசபை வீதி, மானிப்பாய்.

கணவர் பாலர் கந்தையா


## கசிப்புக் காய்ச்சியோருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், செப். 15

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவருக்கு தலா 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஆனந்தராஜா. வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளுக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது. (ம-25)

## மரண அறிவித்தல்

மண்ணில் 14 - 06 - 1957 — விண்ணில் 12 - 09 - 2021



### வஸ்தியாம்பிள்ளை தேவதாஸ்

முல்லைத்தீவை பிறப்பிடமாகவும், கிளாலி, எழுதுமட்டுவாளை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை தேவதாஸ் கடந்த (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் நல்லடக்கம் இன்று (15.09.2021) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கிளாலி சேமக்காலையில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
ஜீவதாஸ் (மகன்)- 0772684632

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 . 08 . 1935 — இறப்பு 07 . 09 . 2019



### அமரர் திலகவதி விஸ்வநாதன்

வேலணை மேற்கு (சிற்பனை)

திதி : 15.09.2021

ஆண்டு இரண்டானதம்மா உங்கள் முகம் காணாமல்
அமுதூட்டி அரவணைத்த எம் தாயை தொலைத்து
விட்டோமே அம்மா...
அம்மா நீங்கள் எங்களுக்கு கிடைத்த அன்புப் பொக்கிஷம்
எங்களை எல்லாம் வளமார வாழவைத்த அன்புத் தெய்வமம்மா
பாசத்தின்பரம் பொருளே என்தாயே....
நித்தம் நித்தம் வாடுகின்றோம் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
எங்குதான் சென்றீரோ அம்மா....
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய சிற்பனை
வேலவனின் பாதங்களை வேண்டுகின்றோம்.

[illegible] மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழமுடியாத....

முக்கியஸ்தரான பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'கடந்த பொதுத் தேர்தலில், கொள்கை ரீதியாக எமது கட்சி தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவே முன்நின்று செயற்பட்டது. வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களை மீளக் கைப்பற்றுவதாகவும் அறிவித்திருந்தது.

துரதிஷ்டவசமாக இன்று எதனை விற்பனை செய்யலாம் என அரசு வகை தேடுகின்றது. வயல் நிலங்கள், பெறுமதியான காணிகள், தொழிற்சாலைகள் என அனைத்தையும் அரசு விற்பனை செய்து வருவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

சொத்துக்களை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு சொத்துக்களை விற்பனை செய்கின்றது. கொழும்பு துறைமுகத்தைச் சேர்ந்த பகுதிகளும் இன்று விற்பனை செய்யப்படவுள்ளன. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அதேபோல் இன்று தொழிற்துறையில் நிபுணர்கள் பலரும் அரசின் குழுக்களிலிருந்து விலகி வருகின்றனர்.

மேலும், பலர் இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். வாழமுடியாத நாடாக இலங்கை மாறி வருகின்றது. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக கொள்கை ரீதியிலான மாற்றம் தேவைப்படுகின்றது' -என்றார். (ம-22)

## யாழ்.பல்கலைக்கழக....

மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அதனை நிகழ்நிலையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், தற்போதைய நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்னர் பிறிதொரு நாளில் சம்பிரதாயபூர்வ பட்ட மளிப்பு விழாவை நடத்தி மாணவர்களுக்குப் பதக்கங்களைப் பெற்றோர் முன்னிலையில் அணிவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களின் ஊடாக மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விளக்கமளிக்கும் ஊடகச் சந்திப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடகச் சந்திப்பின் போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர், பட்டமளிப்பு விழா நிகழ்வு முகாமைத்துவத் தலைவரும், தொழில் நுட்பப் பீடாதிபதியுமான பேராசிரியர் திருமதி சிவமதி சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)

## இலங்கைத்....

தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நோர்வேயில் எட்டு ஆண்டுகள் நீடித்த பழமைவாதிகளது ஆட்சி முடிவுக்கு வந்திருக்கிறது. அங்கு எதிர்க்கட்சியாகிய தொழிற்கட்சி தலைமையில் புதிய அரசு அமையவுள்ளது.

புலம் பெயர்ந்து நோர்வேயில் வசித்து வருகின்ற வெளிநாட்டுப் பூர்வீக இனங்களின் சார்பில் பலர் இந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து மூன்று வயதில் நோர்வேக்குப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழ்ப் பெண் ஹம்ஸி குணரட்ணமும் அவர்களில் ஒருவர். ஹம்சாயினி என்னும் இயற்பெயர் கொண்ட ஹம்ஸி ஒஸ்லோ நகரத்தின் துணை மேயராவார். தொழிற்கட்சி உறுப்பினரான அவர் நோர்ட்டிக் நாடு ஒன்றின் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய முதல் தமிழ்ப் பெண் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார்.

2011 இல் நோர்வேயின் உத்தாயா தீவில் தொழிற்கட்சி இளைஞர் அணியின் விடுமுறை கால முகாமில் இடம்பெற்ற கூட்டுப் படுகொலையில் சுமார் 69 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அந்த இளைஞர் அணியில் இணைந்திருந்த ஹம்ஸி, கொலையாளியின் தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பி மீண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய் சில்லறையாக பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

**பாலன்மில்**

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை, கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதைகோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3Kg முதல் 3000Kg வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும். சாமி, குரக்கன் கதிர்கள் குற்றி தீட்டிக் கொடுக்கப்படும்.

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
021 321 2624

**கடைகள் விற்பனைக்கு**

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள கடைகள் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 077 500 5256

**விதை நெல் விற்பனைக்கு**

சுத்திகரிக்கும் இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிக விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 நெல்லும் 04 மாத விதை நெல்லும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 659 2044

**வேலைவாய்ப்பு**

அலுவலகம் ஒன்றுக்கு கணினி அனுபவம் உள்ள பெண்கள் மட்டும் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 076 373 9832

**திருமண சேவை**

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு யாதகம் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். மற்றும் 40 வருட யாதக பலன் (காண்டம்) பார்க்க முடியும். தொடர்பு:
0770050344, 0740891995
Web:kpthirumanam.com

**வீடு வாடகைக்கு தேவை**

அரச சார்பற்ற அலுவலக பாவனைக்கு வீடு வாடகைக்கு தேவை. 2 or 3 அறைகள். 02 Bathrooms வாகனத் தரிப்பிட வசதிகள். புதிதாக திருத்தப்பட்ட அல்லது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டை எதிர்பார்க்கின்றது. நல்லூர் or கச்சேரி அண்மித்த பிரதேசம் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 603 6716

**சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்**

யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை, மிருசுவில்

எமது பாடசாலையில் 02.08.2010 இருந்து 15.09.2021 வரை கடமையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியை

**செல்வி கந்தையா செல்வமலர்**



சங்கீதம் (SLTS-I)
ஓய்வுபெறும் ஆசிரியை அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்
யா/மிருசுவில் அ.த.க. பாடகசாலை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



Best Wishes

**வைத்திய கலாநிதி இராஜேந்திரா சுரேந்திரகுமாரன்** (MD(Com.Med.))

கௌரவ வைத்திய அத்தியட்சகர்
(கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து) - மூளாய்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பல்வேறு கல்விசார் நிலைகளில் கடமையாற்றி வந்தவரும் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாயில் கௌரவ வைத்திய அத்தியட்சகராகவும் கடந்த பல ஆண்டுகள் அரும்பெரும் சேவையாற்றி வருபவருமான வைத்திய கலாநிதி இராஜேந்திரா சுரேந்திரகுமாரன் அவர்கள் யாழ் பல்கலைக்கழக, மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக உயர்வு பெற்றமையையிட்டு மனதார பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல உயர்வுகள் கண்டு உடல் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)
மூளாய், சுழிபுரம்.

தலைவரும்
பணிப்பாளர் சபையும்,
பணியாளர்களும்.

**மணிவிழா வாழ்த்து**



Best Wishes Best Wishes

மிருசுவில் அரசு தமிழ் கலவன் பாடசாலையில் சங்கீத பாட ஆசிரியையாக கடமையாற்றி இன்று (15.09.2021) மணிவிழா காணும்

**செல்வி**
**செல்வமலர் கந்தையா**

அவர்கள்
ஓய்வுகாலத்தில் நலமுடன் நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

[illegible] வீதி,
[illegible] ஒழுங்கை,
கொடிகாமம்.

வாழ்த்துவோர் :
சகோதரிகளும்
பெறாமக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுத்...

சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பின்றி ஏற்படுத்தப்படக்கூடிய வெளியகப் பொறிமுறைகளால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது என்பதுடன் அது அரசியல் மயப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியிலும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்களின் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 48ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமான நிலையில், ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரால் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் நாளாக நேற்று இடம்பெற்ற அமர்வில் இலங்கை சார்பில் உரை நிகழ்த்திய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்ட விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

'எமது நாட்டின் அரசமைப்பு மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு அமைய ஐக்கிய நாடுகள் சபையுடனும் அதன் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளுடனும் தொடர்ச்சியானதும் வலுவானதுமான ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கை மண்ணிலிருந்து 12 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டது. அதனூடாக நாம் எமது மக்களின் நலனை முன்னிறுத்தி நாட்டில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையை மீட்டெடுத்துள்ளோம். எமது ஜனநாயக மரபுகளை நாம் உறுதியாகப் பேணி வந்திருக்கின்றோம். கடந்த 2019ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தல் என்பன அதிகளவிலான வாக்காளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டன. அதேபோன்று இயலுமானவரை விரைவாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதிலும் அரசு அக்கறை கொண்டிருக்கின்றது.

'காயங்களை ஆற்றுதல்' என்ற அடிப்படையிலேயே நாம் போருக்குப் பின்னரான மீட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் தீவிரமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் 16 பேர் அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைசெய்யப்பட்டனர்.

அதேவேளை, போருக்குப் பின்னரான கண்ணிவெடி அகற்றல், புனர்நிர்மாணம் மற்றும் மீள்குடியேற்றத்திட்டங்களின் வெற்றியானது, தேசிய நல்லிணக்கத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டிருக்கும் பெரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும், நல்லிணக்கத்தை முன்நிறுத்திய உள்நாட்டுப் பொறிமுறைகளின் ஊடாக முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதனுடன் தொடர்புடைய ஏனைய கட்டமைப்புக்களுடன் இணைந்து காணாமல்போனோரின் பட்டியலைத் தயாரித்திருக்கின்றது. அதேபோன்று இவ்வருடத்தில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தால் 3 ஆயிரத்து 775 இழப்பீட்டுக் கோரிக்கைகள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தால் அதன் 8 அம்ச செயற்றிட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் ஆணையை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் சமாதானம், நீதியை வலுப்படுத்துவதற்கான வழிநடத்தல் குழுவொன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கும், சர்வதேச சட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைப்பதற்கும் பிரத்தியேகமாக அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் அக்குழுவினால் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகளை விசாரணை செய்யவும், நிலுவை வழக்குகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்குமென விசேட ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல்போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், முந்தைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதற்காகவும் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஏற்கனவே ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கும் நிலையில் அதன் இறுதி அறிக்கை அடுத்த 6 மாதகாலத்துக்குள் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியை வலுப்படுத்தும் நோக்கில் அரசு சிவில் சமூகத்துடன் ஒன்றிணைந்து செயலாற்றி வருகின்றது. உயிர்த்தஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொண்ட குற்றவாளிகள்மீது இலங்கை தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் அதனுடன் தொடர்புடைய அனைத்து சட்டநடைமுறைகளையும் உரியவாறு பின்பற்றி வருகின்றது.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும், அனைத்து மதங்களைச் சார்ந்த இலங்கையர்களையும் பாதுகாப்பதிலும் அரசு உறுதிப்பாட்டுடன் செயற்படும்.

அடுத்ததாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தின் ஊடாக நிறுவப்படக்கூடிய எந்தவொரு வெளியகப்பொறிமுறை தொடர்பான முன்மொழிவுகளையும் நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். அதேவேளை, உள்ளகப்பொறிமுறைகளின் ஊடாக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏனெனில் இத்தகைய நடைமுறைகள், ஏற்கனவே 30/1 தீர்மானத்தின் ஊடாக அனுபவப்பட்டதைப் போன்று எமது சமூகத்தைத் துருவமயப்படுத்திவிடக்கூடும். ஐ.நா. மனித உரிமைகள் சபை அதன் ஸ்தாபகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பின்றி ஏற்படுத்தப்படக்கூடிய வெளியகப் பொறிமுறைகளால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது என்பதுடன் அது அரசியல் மயப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. குறிப்பாக உலகின் பல பகுதிகளில் மனிதாபிமான மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக வளங்கள் தேவைப்படும் நிலையில், அவற்றை இம்முயற்சிகளில் செலவிடுவது அநாவசியமானதாகும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகத் தற்போது ஏற்பட்டிருக்கும் அழுத்தங்கள் மற்றும் சவால்களின் கீழ் பொதுமக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதை அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாகக் கருதுகின்றோம்.

நாம் சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதை ஏற்றுக்கொள்வதில் வெளிப்படைத்தன்மையைப் பேணுகின்றோம். எனவே, பொறுப்பானதும் ஜனநாயகத்தன்மை வாய்ந்ததுமான அரசு என்ற வகையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளில் உறுதியான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்' என்றார். (ம-22)

## கொரோனா பலி...

உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 567ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 136 பேரில் 60 பெண்களும், 76 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். (ம-22)

## கொரோனா ...

பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 90 ஆயிரத்து 955ஆக எகிறியுள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,354 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 15 ஆயிரத்து 649ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## பருப்பு விலை...

சங்கத்தின் சார்பில், சந்தையில் பருப்பின் விலையானது தற்போது 250 ரூபா வரையில் அதிகரித்துள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் கனடாவில் இருந்துதான் நாட்டுக்குள் பருப்பு கொண்டுவரப்படுகின்றது. ஆனால், கனடாவில் விளைச்சல் குறைந்துள்ளமையால் பருப்பின் விலை அதிகரிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது.

உலக சந்தையில் பருப்பின் உற்பத்தியில் கனடா முக்கிய தாக்கம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜி.சீ.ஈ. (சா/த)...

கண்டவாறு கூறினார். ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளைத் துரிதமாக வெளியிட கல்வி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(தொடர்புடைய செய்தி உள்ளே) (ம-22)

## 21ஆம்...

படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாட்டில் கடந்த நான்கு வாரங்களாகத் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. அடுத்த வாரம் முதல் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திறந்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தடுப்பூசி வழங்கல் மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்' என்றார். (ம-22)

## வவுனியாவில்...

கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அவர்கள் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தனர். ஏனைய மூவரில் ஒருவர் முதியவர் காப்பகத்திலும், இருவர் தத்தம் வீடுகளிலும் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-110)

## 1970...

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

எல்பிட்டிய பகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'அரசின் சில கொள்கைகள் எதிர்க்கட்சிக்கு நகைச்சுவைகளாகவும், சமூக வலைத்தளங்களுக்கு நல்ல செய்திகளாகவும் மாறிவிட்டன. 1970ஆம் ஆண்டுக்கு நாடு மீண்டும் செல்வது நல்லது என சிலர் நினைத்தாலும், அந்த சகாப்தத்தில் நாடு கடனில்லாமல் இருந்தது. இன்று அவ்வாறு கடனில்லாமல் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினராக இருக்கும்போதே அஜித் நிவாட் கப்ரால் முதன்முதலில் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டார். மத்திய வங்கியானது ஏனைய நிறுவனங்களைப் போன்று அரசியலாக்கப்பட்ட இடமாக இருக்கக் கூடாது. மத்திய வங்கியின் தீர்மானமானது நாட்டை அபிவிருத்தி செய்வதாக இருக்க வேண்டுமே தவிர அரசியல்வாதிகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் இடமாக இருக்கக்கூடாது' என்றார். (ம-22)

## 'மாஸ்க்'...

நெல்லியடி பொலிஸார் 15 பேருக்கு எதிராக மேற்படி வழக்குகளைத் தாக்கல் செய்திருந்த நிலையில், அவற்றில் 12 பேருக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களுக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் கடும் எச்சரிக்கையும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. (ம-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை வழித்துத்துடைத்தது தென்னாபிரிக்கா



**கொழும்பு, செப். 15**

**இலங்கைக்கு எதிரான மூன்றாவது ரி20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி.**

தென்னாபிரிக்க அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரில் விளையாடியது. முதலிரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றைய ஆட்டத்துக்கான இலங்கை அணித் தெரிவு படுமோசமான வகையில் அமைந்திருந்தது. அசலன்கா, சந்திமல் இருவரின் வெளியேற்றம் இலங்கை ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

20 பந்துப்பரிமாற்றங்களில் 120 ஓட்டங்களையே இலங்கை அணியால் பெறமுடிந்தது. குசல் பெரேரா பெற்ற 39 ஓட்டங்கள் தான் அதிகபட்சம்.

பந்துவீச்சில் போர்டின், ரபாடா இருவரும் தலா 2 இலக்குகளையும், மார்க்ரம், மகாராஜ், முல்டர் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, இம்மியும் பதற்றம் இல்லாமல் இலங்கையின் பந்துவீச்சை எதிர்த்து ஆடியது. ஆரம்ப வீரர்களான ஹென்றிக்ஸ், குயின்டன் டி ஹொக் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர். வெறும் 14.4 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. குயின்டன் டி ஹொக் 59 ஓட்டங்களையும், ஹென்றிக்ஸ் 56 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

## நடால் பின்னடைவு



மட்ரிட், செப். 15

சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளார் ஸ்பெய்னின் வீரரான ரபேல் நடால். பிரெஞ் பகிரங்கத் தொடரின், பின்னர் நடால் மீண்டும் களமிறங்காமல் உள்ளார். காயம் காரணமாக அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதனால் அவர் தரப்படுத்தலில் 6ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

அதேநேரம் அமெரிக்கப் பகிரங்கத்தைத் தவறவிட்டாலும் ஜோகோவிக் முதலாவது இடத்தில் தொடர்கின்றார். மெட்வதேவ் இரண்டாவது இடத்திலும், சிட்சிபாஸ், 3ஆவது இடத்திலும், ஸ்வரேவ் 4ஆவது இடத்திலும், ருவலேவ் 5ஆவது இடத்திலும் உள்ளனர். பெடரர் 9ஆவது இடத்தில் உள்ளார்.

அமெரிக்கப் பகிரங்கத்துக்குப் பின்னர் இடம்பெற்ற பெரியதொரு மாற்றமாக நடாலின் தரவரிசை இறக்கமே காணப்படுகின்றது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 11 . 1945

மறைவு 13 . 09 . 2021



### சின்னப்புநாயகம் லோரன்ஸ் சவுந்தரநாயகம்

**(ஓய்வுநிலை கணித ஆசிரியர், சென். சார்ள்ஸ் மகா வித்தியாலயம்)**

யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சின்னப்புநாயகம் லோரன்ஸ் சவுந்தரநாயகம் (ஓய்வுநிலை கணித ஆசிரியர் சென் சார்ள்ஸ் மகா வித்தியாலயம்) கடந்த (13.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சின்னப்பு நாயகம் (அதிபர்), அகஸ்ரா தம்பதியரின் அன்பு மகனும், அஞ்சலீனா ரஞ்சி (ஓய்வு நிலை உப அதிபர், சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், டோமினிக், லக்ஷி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வில்பிறட் அலெக்சாண்டர் மில்ரெற் ரட்ணராணி ஆகியோரின் அன்பு மருமகனும், புஸ்பராணி, ராஜேஸ்வரி, மரியசேகரம், கமலராணி, செல்வநாயகம், விமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வராணி, ராஜன், ரட்ணம், பொன்ராஜா, யசிந்தா, வசந்தி, விக்னா ஆகியோரின் மைத்துனரும், ஜெரின், தயாபரன் ஆகியோரின் மாமனாரும், சஞ்சனா, சாரா, ஜோசுவா, ஜெனிபரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் புகழுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**118, 4ம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1931

மறைவு 14 . 09 . 2021



### திருமதி லீலாவதி கந்தையா

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் இராமலிங்கம் வீதி திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி கந்தையா அவர்கள் நேற்று (14.09.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் முதலியார் செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், சின்னத்தம்பி-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (ரவி), இரகுநாதன், ரூபராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்கையர்க்கரசி (மாலினி), பரிமளாதேவி, வைத்தியர் சத்தியமூர்த்தி, இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கமலாதேவி அவர்களின் அன்புச் சகோதரியும், கௌசிகன், விபுலன் (ஜேர்மனி), பபுஜன், கௌசிகா, காலஞ்சென்ற சுதாஜினி, சுதர்சன், சத்தியரூபன், சாருஜன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Dr.ந.சத்தியமூர்த்தி (மருமகன்)**
**T.P: 077 329 8278**
**021 222 7152**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.